www.EravurSYF.com




முதற்பதிப்பு 1985
இரண்டாம் பதிப்பு 2003
மூன்றாம் பதிப்பு 2004

நூலாசிரியர்
மௌலானா மௌலவி அல்-ஹாஜ் T. M. அமானுல்லா ஆலிம்
(நூரிய்யி)
முதல்வர், ஜாமிஆ மன்பயில் ஹிதாயா அறபுக் கல்லூரி
கல்முனை
இலங்கை

www.EravurSYF.com

## பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| 01. | என்னுரை | 01 |
| 02. | மதிப்புரை | 02 |
| 03. | வாழ்த்துரை | 03 |
| 04. | அணிந்துரை | 04 |
| 05. | அன்று | 06 |
| 06. | சமுதாயப் பிளவுகள் பற்றி பெருமானார் (ஸல்) | 06 |
| 07. | வழிகெட்டோரும் அவர்தம் கொள்கைகளும் | 07 |
| 08. | முஃதஜிலாக்கள் | 07 |
| 09. | ஷீஆக்கள் | 08 |
| 10. | ஹவாரிஜுகள் | 09 |
| 11. | முர்ஜிஆக்கள் | 09 |
| 12. | அல்முஅத்திலாக்கள் | 10 |
| 13. | முஸப்பிஹாக்கள் | 10 |
| 14. | கேளுங்கள் கேட்கவேண்டிய கேள்விதான் | 11 |
| 15. | யார் இந்த ஹவாரிஜுகள் | 12 |
| 16. | ஹவாரிஜுகளின் கொள்கைகள் | 14 |
| 17. | வஹ்ஹாபித்தின் தோற்றம் | 15 |
| 18. | நஜ்தைப் பற்றி நபிகளார் | 18 |
| 19. | வஹ்ஹாபிகளைப் பற்றி நபிகளார் | 19 |
| 20. | வஹ்ஹாபிகளைப் பற்றி அல்லாமா இப்னு ஆபிதீன் | 20 |
| 21. | வஹ்ஹாபியக் கொள்கைகள் சில | 20 |
| 22. | அஹ்லுல் சுன்னத் வல்ஜமாஅத் | 22 |
| 23. | இமாம் அல்அஷ்அரி | 22 |
| 24. | ஹதீஸ் சுன்னத் என்றால்? | 27 |
| 25. | பித்அத் | 28 |
| 26. | மௌலூது, மௌலூது சுன்னத்தா? பித்அத்தா? | 31 |
| 27 | மௌலூதைப் பற்றி மார்க்கமேதைகள் | 33 |
| 28. | ஸஹாபாக்கள் மௌலூது ஓதினார்களா? | 33 |
| 29. | ராத்திபு, திக்ரு என்றால் என்ன?, திக்ரும் குர்ஆனும் | 36 |
| 30. | திக்ரும் திரு நபியும் | 37 |
| 31. | ஆடியும் அசைந்தும் திக்ரு செய்யலாமா? | 38 |
| 32. | ராத்திபிலுள்ள திக்ருகள் | 39 |
| 33. | வஹ்ஹாபிகளைப் பற்றிய பாடல் | |



## என்னுரை

புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே! சாந்தியும் சமாதானமும் இறைத்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள்மீதும் அவர்களின் உற்றார் உறவினர்கள் அவர்கள் வழி பேணி நடக்கின்ற நல்மக்கள் அனைவர்கள்மீதும் உண்டாவதாக! ஆமீன்.

அன்புடையீர், பண்புடையீர்,
அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபறகாத்துஹு"

நீண்ட நாட்களாக எனது மனக்கண்முன் சுன்னத்து வல் ஜமாஅத்தின் கொள்கைகளை விளக்கி ஒரு நூல் வெளியிட வேண்டுமென்ற எண்ணம் இருந்து வந்தது. இந்தத் துறையில் ஈடுபடுவது மிக சிரமம் என்பதாலும் அலுவல்கள் அதிகமாக இருந்தமையாலும் தீன்தாரிகளான மார்க்கத்தில் பூரிப்புடைய எனது இஸ்லாமிய சகோதரர்களில் ஒரு சிலர்கள் வேண்டியும் காலம் கடத்திக் கொண்டே வந்தேன். மேலும் தமிழக மக்கள் சமீபகாலம் வரையும் மாற்றாரின் கூற்றுக்கு செவிசாய்க்காமல் மக்கள் இக்கியமாகவும் சகோதர பாசத்தோடும் சுன்னத்து வல் ஜமாஅத்தின் கொள்கைகள் கோட்பாடுகளை ஏற்று ஒற்றுமையோடு வாழ்ந்து வந்ததால் உலமாக்கள் இந்தத் துறையில் அதிக கவனம் செலுத்தவில்லையென்பது உண்மையே. ஆனால் சமீபகாலத்தில் சிலர் ஒற்றுமையைக் கெடுக்கும் பொருட்டு இது நாள் வரையிலும் முஸ்லிம்களாகிய நாம் தொண்டு தொட்டு செய்து வந்த கப்ரு ஜியாரத், மௌலிது ஷரீப், ராத்தீப், யாகுத்பா போன்றவைகளை ஓதுதல் இன்னும் இது போன்ற விசயங்கள் மார்க்கம் தடுத்திருப்பதோடு குப்ரையும், ஷிர்க்கையும் வருத்தி வைக்கின்ற விஷயங்கள் என பிரசுரங்கள், பிரசங்கங்கள், பத்திரிகைகள் வாயிலாக விஷமத் தனத்தை கக்கச் செய்து மக்கள் மனத்தில் குழப்பமான சூழ்நிலையை உருவாக்கியதை கண்டு இன்னும் மௌனம் சாதிப்பது ஆலிமுக்கு அழகல்ல. அன்றி உண்மையை எடுத்துரைப்பது மிகமிக இன்றியமையாத கடமை என்பதை உணர்ந்து இந்த நூலை எழுத முன் வந்துள்ளேன். இன்ஷா அல்லாஹ் பொதுமக்களாகிய தாங்களின் ஒத்துழைப்புக்கள் இருப்பின் அடுத்தடுத்து இதே போன்ற வெளியீடுகள் வெளியிட மிக உதவியாக இருக்கும். எனது இந்தப் பணியை இறைவன் ஏற்றுக் கொண்டு எனது பாவத்தையும், எனது பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் சுன்னத்து வல்ஜமாஅத்தின் கொள்கைகளை ஏற்று நடக்கின்ற முஃமீன், முஸ்லிம்கள் அனைவர்களின் பாவத்தையும் மன்னித்து ஜன்னத்துல் பிர்தௌஸில் வீற்றிருக்கும் பாக்கியத்தை தந்தருள் புரிவானாக! ஆமீன்.

யா அல்லாஹ்! உனது பரிசுத்த தீனுல் இஸ்லாத்தின் அழகிய ரூபத்தை மக்களுக்கு விளக்கி கொடுக்க தௌபீக்கை தந்தருள்வதோடு அதன் அடிப்படையில் வாழ்ந்து உனது அருளை பெறும் பாக்கியத்தை எனக்கும், முஃமினான எல்லா மக்களுக்கும் தந்தருள் புரிவாயாக!
ஆமீன்! ஆமீன்!! ஆமீன்!!! யாரப்பல் ஆலமீன்.

மௌலவி ரி. எம். அமானுல்லா ஆலிம் (நூரிய்யி)

பொதக்குடி அந்நூருல் முஹம்மதிய்யு அரபிக் ~ கல்லூரியின் முன்னாள் முதல்வரும் எனது ஆசிரிய பெருந்தகையுமான அல் ஆலரிமுல் அல்லாமா உஸ்தாதுல் அஸாத்திதா மௌலானா மௌலவி ஏ.கே.எம். ஜியாவுத்தீன் ஆலிம் நூரிய்யி அவர்கள் மனமுவந்தளித்த

## மதிப்புரை

கோவை கோட்டைமேடு இம்தாதுல் உலூம் அரபிக் கல்லூரியில் முதல்வராக பணியாற்றி வரும் மௌலவி ரி.எம். அமானுல்லா ஆலிம் நூரிய்யி அவர்களால் தொகுக்கப்பெற்ற நூலை மிக உன்னிப்பாக துவக்க முதல் இறுதிவரை படித்துப் பார்த்தேன். தற்கால மக்களில் பெரும்பாலானோர் பாமர மக்கள் ஒரு புறமிருக்க படித்தவரும் கூட "நபிகள் பிரான் (ஸல்) அவர்கள் மீது புகழ்பாக்கள் பாடக் கூடாது. மீலாதுன் நபி பிறந்ததின விழா என்பது இப்பொழுது ஏற்பட்ட (பித்அத்து) நூதன அனுஷ்டானம்" என துணிந்து கூற முன்வந்துள்ளனர்.

என்னே இவர்களின் வரலாறு தெரியாத வஞ்சகம்! ஆதிபிதா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சுவர்க்கத்தில் படைக்கப்பட்டு கண் விழித்து பார்த்தபொழுது சுவனவாசலில் அல்லாஹ்வின் பெயருடன், முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் என இணைக்கப்பட்டிருக்கிற மற்றொரு பெயர் யார் என வினவிய பொழுது, இவர்கள் தான் உம் சந்ததியில் தோன்றக்கூடிய இறுதி காலத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் இவர்கள் இல்லையெனில் உலகமோ (மண்ணுலகோ விண்ணுலகோ) எதையும் நான் படைத்திரேன் என பதிலுரைத்தான்.

இது மட்டுமா? ஆதிபிதா ஆதம் அலைஹிஸ்ஸலாம் சுவனத்தில் துயில் கொண்ட நேரம் அவர்களின் இடது விலா எலும்பில் ஒன்றை மூலப்பொருளாக வைத்து நாம் ஆதி அன்னை ஹவ்வா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களைப் படைத்தான். நித்திரை நீங்கி கண் விழித்தபொழுது ஓர் ஆரணங்கு தன் பக்கத்தில் வீற்றிருப்பதைப் பார்த்து ஆசையுற்று அப்பெண்ணை கட்டித்தழுவ முற்பட்டார்கள். அப்பொழுது அல்லாஹ்வின் புறத்திலிருந்து உத்தரவு பிறந்தது. ஓ ஆதமே இப்பெண்ணை உனக்கு ஆறுதலளிக்கும் துணைவியாக படைத்திருக்கிறேன். எனினும் மஹர் கொடுக்க வேண்டும் என அதற்கு ஆதம் அலைஹிஸ்ஸலாம் மஹர் கொடுக்க என்னிடம் ஒரு பொருளுமில்லையே என ஏங்கினார்கள். பரவாயில்லை உன் சந்ததியில் தோன்றும் இறுதி நபி (ஸல்) அவர்கள் மீது 10 தடவை ஸலவாத்து ஓதி அதன் நன்மையை மஹராக வை என்று அல்லாஹ் ஆணையிட்டான்.

இவைகளெல்லாம் நபிகள் நாயகம் (ஸம்அம்) அவர்களைப் பற்றிய மௌலிது, மீலாது அல்லவா? சிந்தனைக்கு சில எடுத்துக்காட்டுகள். அடுத்து இதே நூலாசிரியரால் மிகப் பிரயாசையுடன் பல பெரிய நூல்களை ஆதாரமாகக் காட்டி தொகுக்கப்பெற்ற 73 கூட்டத்தாரின் கொள்கை விளக்கம் பார்த்தேன். இந்த திரட்டு இக்காலத்திற்கு மிக முக்கியமான நூல். ஒவ்வொரு கூட்டத்தாரும் யூத கிருஸ்த்துவர்களைப் போன்று தங்கள் தங்களுடைய கொள்கையும் செயலும் தான் சிறந்தது. எனவே எங்களுக்குத்தான் சுவனம் சொந்தம் மற்றவருக்கு இல்லை எனத் துணிந்து கூறும் இக்கால மக்களுக்கு ஒரு முக்கியமான நூலாக அமைந்திருக்கிறது. இத்தொகுப்புக்கள் சீக்கிரம் அச்சாகி வெளி உலகுக்கு அறிமுகமாகி எல்லா மக்களும் வாங்கிப் படித்து பயன்பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்வதுடன் நூலாசிரியருக்கு எல்லாவிதமான வசதி வாய்ப்புக்களையும் அளிக்க வேண்டுமென்று இறைவனிடம் இரு கரமேந்தி இறைஞ்சுகிறேன். நூல் ஆசிரியரின் தன் முயற்சியைப் பாராட்டுகிறேன்.



திருப்பூர் அஸ்ஸிராஜுல் முனீர் அரபிக் ~ கல்லூரியின் முதல்வர் மௌலானா மௌலவி ஆலிமுல் அல்லாமா அல்ஹாஜ் எம். எஸ். முஹம்மது ஹஜ்ரத் பாக்கவி அவர்கள் மனமுவந்தளித்த

## வாழ்த்துரை

நபிமார்கள் வலிமார்கள், ஷ"ஹதாக்கள் உலமாக்கள் மீது ஈமானுடைய அடிப்படையில் தொண்டு தொட்டு பொதுமக்களின் உள்ளங்களில் இருந்து வரும் மரியாதையையும், கண்ணியத்தையும் கெடுக்கும் விதத்தில் வெளியீடுகளும், பிரசுரங்களும், சொற்பொழிவுகளும் நடைபெற்று வரும் இக்காலத்தில் பொதுமக்களின் உள்ளத்தை பாழ்படுத்தாமல் பாதுகாக்க இந்நூல் மிக பயனுள்ளதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. இதை எழுதி வெளியிடும் ஆசிரியர் அவர்கள் மிகவும் பாராட்டுக்குரியவராவார். அல்லாஹு" இதை பயனுள்ள நூலாக ஆக்கியருள்வானாக!

இப்படிக்கு,
**எம். எஸ். முஹம்மத் உபிய அன்ஹு"**

www.EravurSYF.com
Twitter: SYFSMS



கல்முனை அல் ~ ஜாமிஆ மன்பஉல் ஹிதாயா அரபுக் கல்லூரியின் விரிவுரையாளர் மௌலவி பி.எம்.ஏ. ஜலீல் (பாகவி) அவர்கள் வழங்கிய

## அணிந்துரை

*எல்லாம் வல்ல அல்லாஹு" சுப்ஹானஹு" வதஆலாவின் நேசத்தின் வெளிப்படையாகிய படைப்புக்கள்மீது கருணை காட்டுவது ஈமானில் ஓர் அங்கமாகும்.*

*குறிப்பாக இறை நெருக்கம்பெற்ற நபிமார்கள், நாதாக்கள்மீது நேசம் கொள்வது ஈமான் உயர்வடைவதற்கோர் பிரதான அம்சம் என்பதை தலைசிறந்த நூற்களின் ஆணித்தரமான ஆதாரங்களோடு அழுத்தம் திருத்தமாக அழகுபடுத்தியிருக்கும் இச்சிறப்புமிகு நூல் இஸ்லாமிய மக்களுக்கு கிடைப்பதற்கரியதொரு வரப்பிரசாதமாகும்.*

*உலகளாவிய ரீதியில் முஸ்லிம்களின் ஈமானை ஆட்டங் காணச்செய்து கொண்டிருக்கும் கொடிய வஹ்ஹாபிகளின் கோரப் பிடியிலிருந்து முஸ்லிம்கள் தம்மை விடுவித்துக்கொள்ளும் அர்த்த புஷ்டியுள்ள கருத்துக்களை செழுமையாகவும் இலகுவான தமிழிலும் தொகுத்துத் தந்த சங்கைமிகு ஹஸ்ரத் ரி. எம். அமானுல்லாஹ் ஆலிம் (நூரிய்) அவர்களது இவ்வாக்கத்தை பரிபூரணமாகவே படித்துணர்ந்து பரவசமடைந்தேன்*

*மேற்கத்தியரின் உலுத்துப்போன புதுமை வாதத்திற்கமைவாக இஸ்லாத்தினை உருமாற்றத் துடிக்கும் வஹ்ஹாபிய விஷமியருக்கு இஸ்லாத்தை அதன் அடிப்படைவாதத்திலிருந்து அகற்றிவிடவோ மாசுபடுத்தவோ முடியாது என்பதனை திக்ரின் சிறப்புக்கள் மூலம் ஹஸ்ரத் அவர்கள் உணர்த்தியிருப்பது அவர்களது கருத்துக்களுக்கு அணிசேர்க்கிறது.*

*சர்வாதிக்கம் நிறைந்த சங்கைமிகு றஹ்மான் ஹஸரத் அவர்களுக்கு ஈருலகிலும் தனது திருப்பொருத்தத்தையும் திருக்காட்சியையும் நல்கி, இவ்வாக்கத்தின் சத்தான கருத்துக்கள் மூலம் மு.்.மீன்களின் உள்ளங்களை ஒளிபெறச் செய்வானாக. ஆமீன், ஆமீன் யாறப்பல் ஆலமீன்.*

இவ்வண்ணம்
**மௌலவி பி. எம். ஏ. ஜலீல் (பாகவி)**
**அஃபா அன்ஹு"ல்பாரி**

www.EravurSYF.com
Twitter: SYFSMS





***இவ்வுலகில் நல்லோர், தீயோர் யாவருக்கும் பொதுவாகவும் மறுமையில் நல்லோருக்கு மட்டும் குறிப்பாகவும் அருள்புரிபவனான அல்லாஹ் ஜல்லஷ:னுஹு" தஆலாவின் திருநாமத்தால் இதனை ஆரம்பிக்கின்றேன்.***

அல்லாஹு"தஆலா தனது திருமறையிலே கூறியுள்ளான்,

*நிச்சயமாக இது எனது பாதை. அதையே பின்பற்றிக் கொள்ளுங்கள். நீங்கள் பல வழிகளைப் பின்பற்ற வேண்டாம் (அப்படி பல வழிகளை பின்பற்றுவீர்களானால்) அவனுடைய பாதையை விட்டும் அது உங்களை பிரித்துவிடும். நீங்கள் பயபக்தி அடையவே அதை உபதேசித்துள்ளான்*

(அல்குர்ஆன் 6 : 153)

*(நபியே!) இன்னும் சத்தியம் வந்தது அசத்தியம் அழிந்தது. நிச்சயமாக அசத்தியமானது அழிந்து போவதேயாகும் என்று கூறுவீராக.*

(அல்குர்ஆன் 17 : 81)

**கடைசி காலத்தில் பொய்யர்களான மோசடிக்காரர்கள் தோன்றுவார்கள். நீங்களும் உங்களது முன்னோர்களும் கேள்விப்படாத பொய்யான விஷயங்களை அவர்கள் உங்களிடம் கொண்டு வருவார்கள். அவர்களைக் குறித்து நான் எச்சரிக்கை செய்கிறேன். அவர்கள் உங்களை வழிகெடுத்துவிட வேண்டாம். மேலும் உங்களை குழப்பத்தில் ஆழ்த்திவிட வேண்டாம்.**

நூல் மிஷ்காத் பக்கம் 28
அறிவிப்பவர் அபூஹு"ரைரா (ரலி)

*இறைவா! நீ எங்களை நேர்வழியில் நடத்துவாயாக. (அது) நீ எவர்களுக்கு அருள்புரிந்தாயோ அவ்வழி (அது) உன் கோபத்திற்கு ஆளானோர் வழியுமல்ல. நெறிதவறியோர் வழியுமல்ல.*

(அல்குர்ஆன் 1 : 5,6,7)

"இறைவா! எங்களது பிரார்த்தனையை நீ அங்கீகரிப்பாயாக"

## அன்று

அண்ணல் நபி (ஸல்) அவர்களுடைய காலம் பொற் காலமாகும். சமுதாயத்தில் பிளவுகளை ஏற்படுத்த முனைந்த போலி நபிகளை, இவர்கள் போலி நபிகள்தான் என எதிரிகளும் எளிதில் தெரிந்து, அவர்களின் முத்திரைகளை கிழித்தெறிந்த காலம் அது. ஆதலால் சமுதாயத்தில் எந்தப் பிளவுகளும் ஏற்படவில்லை.

ஆனால், பிற்காலத்தில் அப்படி இராது என்பதைத் தெரிந்த அல்லாஹ்வும், அண்ணல் நபி (ஸல்) அவர்களும், இஸ்லாமிய உண்மை நெறிகள், கொள்கைகள் யாதென சமுதாயம் தெரிந்து கொள்வதற்கும், போலிகளை அடையாளம் கண்டு கொள்வதற்கும் ஒரு சில முன்னறிவிப்புக்களை நமக்கு காட்டியுள்ளார்கள்.

இன்று போலிகள் தங்களது கூற்றுக்கு ஆதாரமாக குர்ஆனையும், ஹதீதையும் காட்டுவதால் பாமரர்கள் உண்மை எது? பொய் எது? என்பதை தெரிந்துகொள்ள முடியாமல் தவிக்கிறார்கள். அவர்களுக்கு உண்மை நிலையை எடுத்துக் காட்டாது அறிஞர்கள் மௌனமாக இருப்பின் இறைவனின் சாபம் ஏற்படும் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியிருப்பதால் எமக்குத் தெரிந்த உண்மையை சமுதாய மக்களுக்குத் தெரிவித்துவிட வேண்டுமெனும் நோக்கத்திலேயே இந்நூலை எழுதியுள்ளேன்.

நேர்வழியை நாடும் மக்களுக்கு நாயன் தனது நிறையருளைப் பொழிவானாக!

## சமுதாயப் பிளவுகள் பற்றி பெருமானார் (ஸல்)

“பனூஇஸ்ரவேலர்களில் நிகழ்ந்ததைப் போன்றதொருகாலம் எனது சமுதாய மக்களில் நிகழும். தாயிடம் உறவு கொண்ட ஒருவன் அவர்களில் இருந்திருப்பின் இவர்களிலும் அவ்வாறே ஒருவன் இருப்பான். இஸ்ரவேலர்கள் 72 கூட்டங்களாகப் பிரிந்தார்கள். எனது சமுதாய மக்களோ 73 கூட்டங்களாகப் பிரிவார்கள். அவர்களில் ஒரு கூட்டத்தாரைத் தவிர்த்து மற்ற கூட்டமனைத்தும் நரகவாசிகளாவார்கள்” என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சொன்னபோது “(யாரசூல்லாஹ்) அவர்கள் யார்?” என சஹாபாக்கள் கேட்டார்கள். அப்போது “நானும் எனது தோழர்களும் எந்த கொள்கைகளின் பிரகாரம் வாழ்கின்றோமோ அந்தக் கொள்கைகளை பின்பற்றுகின்றவர்கள்” எனக் கூறினார்கள் கோமான் நபிகள் (ஸல்) அவர்கள் என்று அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

மிஷ்காத், பக்கம் : 30
அறிவிப்பவர் : திர்மிதி



## வழிகேட்டோரும். அவர் தம் கொள்கைகளும்

எழுபத்திரண்டு கூட்டங்கள் யார்? அவர்கள் தம் கொள்கைகள்தான் என்னென்ன? என்பதை ஒவ்வொரு முஸ்லிமும் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் உண்மையான கொள்கைகளைத் தெரிந்து வாழமுடியும். ஆதலால் அந்த 72 கூட்டங்களைப் பற்றிப் பார்ப்போம்.

### 01 - மு.ஃ.தஜிலாக்கள் :

இவர்களின் தலைவர் பெயர் வாஸிலிப்னு அதாஉ என்பதாகும். இவர் இமாம் ஹஸனுல்பஸரி (ரலி) அவர்களது சமூகத்தில் பெரும்பாவம் செய்கின்றவன் காபிருமல்ல, முஸ்லிமுமல்ல, இரண்டிற்கும் இடைப்பட்டவனாவான் என பிரச்சினை செய்த போது,

இமாம் ஹஸன் பஸரி (ரலி) அவர்கள் “இ.ஃ.தஜலஅன்னா, (நம்மை விட்டும் இவர் நீங்கிவிட்டார்) எனச் சொன்னார்கள். இதன் காரணமே இவருக்கும், இவரைச் சார்ந்தோருக்கும் “மு.ஃ.தஜிலா” (நீங்கியவர்கள்) எனும் பெயர் ஏற்படலாயிற்று.

இவர்கள் “பாவிகளுக்கு பெருமானார் (ஸல்) அவர்களுடைய ‘ஷபாஅத் இல்லை’ எனச் சொல்கிறார்கள்.

மேலும், அடியார்களுடைய செயல்களுக்கும், ஆண்டவனுக்கும் எந்த சம்பந்தமுமில்லை, எதையும் செய்வதற்கு முழு ஆற்றல் அடியார்களுக்கு உண்டு எனக் கூறி “கலாஉல் கத்ரை” மறுக்கிறார்கள். ஆதலால் இவர்கள் கத்ரிய்யா என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

நன்மை செய்தவனுக்கு கூலியும், தீமை செய்தவனுக்கு தண்டனையும் வழங்குவது எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மீது கடமையல்ல எனும் சுன்னத் வல்ஜமாஅத்தின் கொள்கைக்கு எதிராக அது அல்லாஹ்வின் மீது கடமையே எனக் கூறுகிறார்கள்.

இவர்கள் அஹ்லுத்தவ்ஹீதிவல்அத்ல் (ஏகத்துவமும் நீதமும் உடையவர்) எனப் பெயர் சூட்டிக் கொண்டார்கள். இவர்கள் இன்னும் பல தவறான கொள்கைகளை கடைப்பிடித்து வந்தார்கள்:

www.EravurSYF.com
Twitter: SYFSMS



01. அல் வாஸிலிய்யா
02. அல் அம்ரிய்யா
03. அல் ஹுதைலிய்யா
04. அன் னிளாமிய்யா
05. அல் மிஜ்தாதிய்யா
06. அல் ஹிஸாமிய்யா
07. அஸ் ஸாலிஹிய்யா
08. அல் ம.ஃ.மரிய்யா
09. அஸ் ஸீமாமிய்யா
10. அல் ஜாஹிலிய்யா
11. அல் ஜுப்பாஇய்யா
12. அல் ஹாஸிமிய்யா

என 12 கூட்டங்களாக இவர்கள் பிரிந்திருக்கிறார்கள்.

### 02 - ஷீஆக்கள் :

இவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்குப் பின்பு ஹலரத் அலி (ரலி) அவர்கள்தான் உண்மையான இமாம் எனக்கூறி ஹலரத் அலி (ரலி) அவர்களை பின்பற்றுவதால் “ஷீஆக்கள் என்றும், அநேக சஹாபாக்களின் சொல்லை புறக்கணிப்பதால் ராபிலிய்யாக்கள்” என்றும் சொல்லப்படுகிறார்கள்.

இவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களுடைய தூதுத்துவத்தில் ஹலரத் அலி (ரலி) அவர்களுக்கு கூட்டு உண்டு எனக் கூறுகிறார்கள். மேலும் ஹலரத் அபூபக்கர் (ரலி) அவர்களையும், ஹலரத் உமர் (ரலி) அவர்களையும் காபிர் எனச் சொல்லவும் திட்டவும் செய்யலாம் என்றும் ஹலரத் ஆயிஷா (ரலி) அவர்களை அவதூறு சொல்லலாம் என்றும் கூறுகிறார்கள். (அல்லாஹ் நம்மைக் காப்பாற்றுவானாக!)

இன்றும் பல தவறான கொள்கைகளைக் கொண்ட இவர்கள் மு.ஃ. தஜிலாக்களுடைய ஒருசில கொள்கைளுக்கு ஒத்துமிருக்கிறார்கள். இவர்களும் 12 கூட்டங்களாகப் பிரிந்திருக்கிறார்கள் அவை:

01. அல் காமிலிய்யா
02. அல் ஜனாஹிய்யா
03. அல் ஹத்தாபிய்யா
04. அல் குராபிய்யா
05. அத் தம்மிய்யா
06. அல் ஜராமிய்யா
07. அல் முபவ்விளா
08. அன் நஸீரிய்யா
09. அல் இஸ்ஹாக்கிய்யா
10. அல் இஸ்மாயீலிய்யா
11. அஜ் ஜைதிய்யா
12. அல் இமாமிய்யா

www.EravurSYF.com
Twitter: SYFSMS



### 03 - ஹவாரிஜுகள் :

இவர்கள் ஹலரத் அலி (ரலி) அவர்களுடைய ஆட்சியின் போது அவர்களுக்கு எதிராகத் தோன்றிய கூட்டமாகும். கூபாவில் ஹரூரா எனும் கிராமத்தில் இவர்கள் ஒன்றுகூடி சதித்திட்டங்கள் இட்ட காரணத்தால் ‘ஹரூரிய்யா’ என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

இவர்கள் ஹலரத் உஸ்மான் (ரலி), ஹலரத் அலி (ரலி), ஹலரத் ஹஸன், ஹுஸைன் (ரலி) போன்ற சஹாபாப் பெருமக்களை கண்டபடி வசைமாறி பொழியவும், ஹலரத் அலி (ரலி) அவர்களை மிகவும் மட்டகரமாகப் பேசவும், ‘காபிர்’ எனச் சொல்லவும் செய்கிறார்கள்.

01. அல் பை ஹஸிய்யா
02. அல் அஜாரிகா
03. அல் இபாஸிய்யா
04. யஜீதிய்யா
05. அல் ஹப்ஸிய்யா
06. அல் அஜாரிதா
07. அல் ஹல்பிய்யா
08. அல் ம.ஃ.லூமிய்யா
09. அஸ்ஸஆலிபிய்யா
10. அல் அஹ்னஸிய்யா
11. அஸ்ஸைபானிய்யா
12. அல் மக்ருமிய்யா

என 12 கூட்டங்களாப் பிரிந்த இவர்கள் மு.ஃ.தஜிலாக்கள், ஷீஆக்களுடைய கொள்கைகளைப் பின்பற்றுகிறார்கள்.

### 04 - முர்ஜிஆக்கள் :

இவர்கள் அல்லாஹ்வை அறிந்து அவனைப் பணிந்து உள்ளத்தால் அவனை நேசித்தால் மட்டும் போதும். அதுவே ஈமானாகும் என்று கூறி இத்தன்மை உடையவன் அல்லாஹ்வை வணங்காதிருந்தாலும், பாவம் புரிந்தாலும் தண்டிக்கப்படமாட்டான் எனக் கூறுகிறார்கள்.

அமல்களை அவ்வப்போதுதான் செய்ய வேண்டும் என்பதில்லை. அவைகளை தாராளமாகப் பிற்படுத்திக்கொண்டே போகலாமென இவர்கள் சொல்வதால் “முர்ஜிஆக்கள்” என அழைக்கப்படுகிறார்கள்.

அடியார்களை பாவச் செயல்களைச் செய்யுமாறு அல்லாஹ்தான் நிர்ப்பந்திக்கிறான் என்றும் இவர்கள் கூறுகிறார்கள். ஆதலால் ‘ஜப்ரிய்யாக்கள்’ என்றும் அழைக்கப்படுகிறார்கள். இவர்களும் 12 கூட்டங்களாகப் பிரிந்திருக்கிறார்கள். அவை:

01. அல் யூனுஸிய்யா
02. அல் உபைதிய்யா
03. அஸ் ஸப் வானிய்யா
04. அஸ் ஸவ் மானிய்யா
05. அத் தாரி கிய்யா
06. அர்ராஜிய்யா
07. அன் நஜ்ஜாரிய்யா
08. அல் கஸ்பிய்யா
09. அல் மப்ருஹிய்யா
10. அல் ஹுஃப்பிய்யா
11. அல் கல திய்யா
12. அல் ஹஸ்பிய்யா

## 05 - அல் முஅத்திலாக்கள் :

இவர்கள் குர்ஆன் படைக்கப்பட்டது எனக் கூறுகிறார்கள். மேலும் இவர்கள் அல்லாஹ்வின் சிபத்துக்கள் புதிதாக ஏற்பட்டவைகளே. அதாவது, முன்பு அவன் கேள்வி, பார்வை, உயிர் இல்லாதிருந்தான். பின்புதான் இவையெல்லாம் அவனுக்கு ஏற்பட்டன எனவும் கூறுகிறார்கள்.

ஆதலால்தான் 'முஅத்திலாக்கள்' என அழைக்கப்படுகிறார்கள் என்றும், ஜஹ்மிப்னு ஸப்வான் என்பவர் இவர்களுடைய தலைவர்களில் ஒருவராக இருப்பதால் 'ஜஹ்மிய்யா' என்றும் அழைக்கப்படுகிறார்கள். இவர் ஹிஜ்ரி 300ம் ஆண்டு வாக்கில் கொல்லப்பட்டுவிட்டார்.

மு.ஃ.மின்கள் மறுமையில் அல்லாஹ்வைப் பார்ப்பார்கள் என்பதை மறுக்கின்ற இவர்கள், இன்னும் பல்வேறுபட்ட பித்தலாட்டக் கொள்கைகளை கொள்கைகளாகக் கொண்டிருக்கின்றார்கள் இவர்களுள்,

01. அல் அஸ்வாரிய்யா
02. அல் க.ஃ.பிய்யா
03. அல் ஜுஃராரிய்யா
04. அல் மஹ்லூக்கிய்யா
05. அல் வாகிபிய்யா
06. அல் வாரிதிய்யா
07. அல் ஹர்க்கிய்யா
08. அல் பானிய்யா
09. அல் புஸ்தானிய்யா
10. அல் கப்ரிய்யா
11. அன்னுக்ரிய்யா
12. அல் மர்ஸிய்யா

என 12 கூட்டங்களாகப் பிரிந்திருக்கிறார்கள்.

## 06 - முஸப்பிஹாக்கள் :

மனிதர்களைப் போன்ற சடலம் இறைவனுக்கும் உண்டு என இவர்கள் சொல்வதால் 'ஹஸ்விய்யா, முஜஸ்ஸிமா, முஸப்பிஹா' எனும் முப்பெயர்களாலும் அழைக்கப்படுகிறார்கள்.



01. அல் பயானிய்யா
02. அல் முகைரிய்யா
03. அல் ஹிஸாமிய்யா
04. அல் யூனுஸிய்யா
05. அல் ஷைதானிய்யா
06. அல் ஹஸவிய்யா
07. அல் ஜுஃஹவிதிய்யா
08. அல் இத்திஹாதிய்யா
09. அல் ஹுஃலூலிய்யா
10. அல் ஹுஃலூலபிய்யா
11. அல் கர்ராமிய்யா
12. அல் முல்தஜிகிய்யா

என இவர்களும் 12 கூட்டங்களாகப் பிரிந்திருக்கிறார்கள். அல்லாஹ்வின் முகத்தைத் தவிர்த்து அவனது உடலில் மற்ற உறுப்புக்களெல்லாம் அழிந்து விடும் எனக் கூறும் இவர்கள், இதுபோன்ற பல்வேறு தவறான கொள்கைகளை உடையவர்களாக இருக்கிறார்கள்.

மு.ஃ.தஜிலா, ஷீஆ, ஹவாரிஜி, முர்ஜிஆ, முஅத்திலா, முஸப்பிஹா எனும் இந்த அறும்பெரும் கூட்டத்தினரில் ஒவ்வொருவரும் 12 - 12 பிரிவுகளாகப் பிரிந்து அண்ணல் நபி (ஸல்) அவர்கள் முன்னறிவிப்புச் செய்த அந்த 72 கூட்டங்களாக இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் வழிகேடர்களே!

## கேளுங்கள், கேட்க வேண்டிய கேள்விதான் :

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் முன்னறிவிப்புச் செய்த அந்த வழிகெட்ட 72 கூட்டத்தினர்களில் தவறான கொள்கைகளையே துணையாகக் கொண்டுள்ள வஹ்ஹாபி, மவ்தூதி, ஜமாஅத்தே இஸ்லாமி, தப்லீகி போன்ற வழிகேடர்களைக் காணவில்லையே எனும் கேள்வி உங்களில் எழுகிறது. கேளுங்கள் கேட்க வேண்டிய கேள்விதான் அது.

## பதில் இதோ

இஸ்லாம் எனும் போர்வையைப் போர்த்திக் கொண்டு தவறான கொள்கைகளை உருவாக்கி தங்களை சூபிகள் எனக் காட்டிக்கொண்டு குளிர் காய்ந்தாலும் மேல் கூறப்பட்ட அந்த 72 கூட்டங்களில் இவர்கள் ஏதாவதொரு கூட்டமாகவோ அல்லது அந்தக் கூட்டங்கள் கொண்டுள்ள கொள்கைகளை கடைப்பிடிக்கின்ற வர்களாகவோதான் இருப்பார்கள்.

இவர்கள் ஹவாரிஜக் கொள்கைகளை மிகவும் கடைப்பிடிப்பதால் அந்த ஹவாரிஜ்கள் யார் என்பதை விரிவாகத் தெரிந்து கொண்டீர்களேயானால் இந்த வஹ்ஹாபி மௌதூதி, ஜமாஅத்தே இஸ்லாமி, தப்லீகி போன்றோரின் முகத்திரைகளை நிச்சயம் நீங்கள் கிழித்தெறிந்து அவர்களின் உண்மைக் கோலத்தை உலகுக்கு காட்டிக் கொடுத்து விடுவீர்கள்.

புலித்தோல் போர்த்திய நரிதான் இவர்கள் என்பதை அப்போது உலகம் நன்கு தெரிந்து கொள்ளும்.



## யார் இந்த ஹவாரிஜுகள்

கைபர் போரில் கிடைத்த கனீமத் பொருளை ஜிஇர்ரான் என்ற இடத்தில் வைத்து அண்ணல் நபி (ஸல்) அவர்கள் பங்கிட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கும் போது, துல்ஹுஃவை ஸிரத்துத் தமீமி என்பவன் அண்ணல் நபி (ஸல்) அவர்களை அணுகி "நீதமாக பங்கீடு செய்யுங்கள்" எனச் சொன்னான்.

உடனே நபியவர்கள் "நான் நீதமாக நடக்காவிட்டால் பிறகு யார் நீதமாக நடப்பார்கள்?" என்று கூறினார்கள்.

இவர்களின் இந்த சம்பாஷனையை செவிமடுத்த உமர் (ரலி) அவர்கள் அவனை கொன்றுவிடுவதற்காக அனுமதி வேண்டியபோது, வேண்டாம், அவனை கொல்லாதீர் எனத் தடுத்துவிட்ட அண்ணல் நபி (ஸல்) அவர்கள்.

இவனிலிருந்து அல்லது இவனின் சந்ததிகளிலிருந்து சிலர் தோன்றுவார்கள். அவர்களுடைய தொழுகை, நோன்பு, குர்ஆன் ஓதுதல் போன்ற வணங்கங்களை உங்களுடைய வணக்கங்களோடு ஒப்பிட்டுப்பார்ப்பின் உங்களது வணக்கங்களை குறைவானவைகளாகவும், தாழ்ந்தவைகளாகவும் நீங்கள் கருதுவீர்கள்.

ஆனால், அவர்களுடைய வணக்கங்கள் எல்லாம் அவர்களிடமே நின்றுவிடும். அவைகளை அல்லாஹ் அங்கீகரிக்கமாட்டான். அவர்கள் சாணமோ, இரத்தமோ கொஞ்சமும் ஒட்டிக்கொள்ளாதவாறு வேட்டை மிருகத்தின் வயிற்றை துளைத்துக் கொண்டு செல்கின்ற அம்பைப் போன்று தீனை விட்டும் வெளியாகி விடுவார்கள். அதாவது தீனுக்கும் அவர்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இராது. (ஆனால், அவர்கள் தாம்தான் தீன்தாரிகள் என முழக்கமிடுவார்கள்)

இவர்கள் முஸ்லிம்களை கொலை செய்வார்கள். விக்கிரக ஆராதனை செய்பவர்களை விட்டுவிடுவார்கள். எனது இக்காலத்தில் நான் அவர்களைப் பார்ப்பின், ஆதுக் கூட்டத்தார்களை அடியோடு அழிக்கப்பட்டதைப் போன்று இவர்களையும் ஒருவர் கூட இல்லாதவாறு ஒழித்துவிடுவேன் எனச் சொன்னார்கள்.

இந்த ஹதீதில் குறிப்பிடப்பட்ட துல்ஹுஃவைஸிரா என்பவன் எந்த விஷயமும் அறியாத அறிவிலியாக இருந்த காரணத்தால் அவனை கொல்வதற்கு அனுமதிதர மறுத்துவிட்டார்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள்.

இவர்களுடைய புரட்சி ஹலரத் அலி (ரலி) அவர்களுடைய ஆட்சி காலத்தில்



ஆரம்பமாகும் என்று மற்றொரு ஹதீதில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியதற்கொப்ப அலி (ரலி) அவர்களுடைய ஆட்சியின்போது இந்த ஹவாரிஜிகள் அவர்களுக்கெதிராகப் புரட்சி செய்தார்கள்.

அப்போது இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் இவர்களிடம் வாதங்கள் பல செய்து உண்மை நிலையை உணர்த்திக் காட்டியதால் இவர்களில் 4000 பேர் திருந்திவிட்டார்கள். ஏனையோரெல்லாம் பல பிரிவுகளாகப் பிரிந்து சில போலி நபிகளான முஸைலிமா, அஸ்வதுல் அன்ஸிய், துளைஹதுல் அஸத், ஸஜாஹி போன்றோர்களைப் பின்பற்றினார்கள். ஆதலால் அண்ணல் நபி (ஸல்) அவர்களுடைய நுபுவ்வத்தை மறுத்தார்கள். இன்னும் சிலர் விக்ரக வணக்கங்களை மேற்கொண்டார்கள். மற்றும் சிலரோ ஜகாத் கடமையில்லை எனச் சொன்னார்கள்.

நகர்வான் என்ற இடத்தில் ஹலரத் அலி (ரலி) அவர்களை எதிர்த்த 12 ஆயிரம் ஹவாரிஜிகளோடு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்ட துல்ஹுஃவைஸிரா என்பவனும் கலந்துகொண்டு அப்போரிலேயே கொலையுண்டு விட்டான்.

இந்தப் பனிரெண்டாயிரம் எதிரிகளில் சொற்பப் பேர்களைத் தவிர மற்றெல்லோரையும் கொன்று குவித்து வெற்றி வாகை சூடிவிட்டார்கள் ஹலரத் அலி (ரலி) அவர்கள் எனத் தெரிந்த மக்கள் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்தார்கள்.

அப்போது ஹவாரிஜிகளிடமிருந்து காப்பாற்றிய அல்லாஹ்வை ஒரு சிலர் புகழ்ந்த போது, ஹலரத் அலி (ரலி) அவர்கள், நண்பா! இந்த ஹவாரிஜிகள் அடியோடு ஒழிந்து விடவில்லை. இன்னும் ஒரு சில ஆண்களின் முதுகந்தண்டுகளில் எஞ்சியிருக்கிறார்கள். இன்னும் அவர்களை பெண்கள் கருத்தரிக்கவில்லை. இந்த ஹவாரிஜிகளில் கடைசியாக வருகின்றவர்கள் தஜ்ஜாலுடன் சேர்ந்திருப்பார்கள் என ஹலரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்.

நபிமார்கள், வலிமார்களுடைய மு.ஃ.ஜிஸாத்துகளையும், கராமத்துகளையும் மறுக்கின்ற இவர்கள், தஜ்ஜாலுடைய மரணித்தவர்களை உயிர்ப்பித்துக் காட்டும் செயலைப் பார்த்து இது இறைவனின் தன்மையே எண்றெண்ணி தஜ்ஜாலை இறைவனாக ஏற்று அவனோடு சென்று கொண்டிருப்பாகள்.
(நஊது பில்லாஹி மின்ஹா)

இந்த ஹவாரிஜுகளைப் பற்றி இப்னு உமர் (ரலி) அவர்கள் குறிப்பிடும் போது,

அல்லாஹ்வின் படைப்புக்களில் இவர்கள் மிகக் கெட்டவர்கள். காபிர்கள் விஷயத்தில் இறங்கிய திருக்குர்ஆன் வசனங்களை மு.'.மின்கள்மீது சுமத்திய மூடர்கள் எனக் கூறுகிறார்கள். (புகாரி, பக்கம் : 1024)

ஹவாரிஜிகள் ஹலரத் அலி (ரலி) போன்றவர்களை காபிர் எனச் சொல்கிறார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்களால் 'சொர்க்கவாசிகள்' என நன்மாராயம் கூறப்பட்டவர்களை காபிர் எனக் கூறும்போது அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சொல்லை பொய்யாக்குவது குப்ராகும். எனவேதான் ஹவாரிஜிகளை காபிர்கள் என சொல்லப்படுகிறது. இது தகுந்த சரியான சொல்லாகும் என இமாம் தகிய்யுத்தீன் சுபுக்கி (ரஹ்) கூறுகிறார்கள்.

ஹாஷியத்துல்புகாரி, பக்கம் : 1024

## ஹவாரிஜிகளின் கொள்கைகள் :

01. தனக்கும், ஹலரத் முஆவியாவிற்கும் மத்தியில் உள்ள பிரச்சினைகளுக்கு ஹலரத் அலி (ரலி) அவர்கள் தீர்ப்பாளிகளாக ஹலரத் அபூமூஸல்அஷ்அரி (ரலி) அவர்களையும் அம்ருப்னுல் ஆஸ் (ரலி) அவர்களையும் நியமனம் செய்தது குர்ஆனின் சட்ட விதிகளுக்கு மாற்றம் என்பதும் ஆதலால் ஹலரத் அலி (ரலி) அவர்கள் காபிராகி விட்டார் என்பதுமாகும். (நஊது மில்லாஹி மின்ஹு")

02. இமாம் (நாட்டை ஆளுபவர்) குறைஷிகளைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும் எனும் ஹதீதை புறக்கணித்தல்.

03. ஹலரத் அபூபக்கர், ஹலரத் உமர் ஆகிய இருவர்களின் ஆட்சியை ஏற்றுக்கொள்ளல். ஹலரத் உஸ்மான், ஹலரத் அலி ஆகிய இருவரின் ஆட்சியை புறக்கணித்தல்.

04. தங்களது கொள்கைகளை ஏற்றுக் கொள்ளாதவர்கள் காபிர்கள் என்றும், அவர்களது உடமை, பொருள் மற்றும் இரத்தம் ஹலால் என்றும் கூறும் இவர்கள், அவ்வாறே செயல்படவும் செய்தார்கள். முஸ்லிம்கள் இவர்கள் வாழும் பகுதிகளுக்குச் சென்றால் அவர்களை கொலை செய்து விடுவார்கள். ஹலரத் அப்துல்லாஹ் பின் ஹப்பாப் பின்அரத் (ரலி) போன்ற இமாம்களை கொலை செய்தார்கள்.

05. காபிர்கள் விஷயமாக இறங்கிய குர்ஆனின் வசனங்களை மு.'.மின்கள் மீது சுமத்தாட்டுதல் போன்றவை இவர்களது கொள்கைகளாகும்.



## வஹ்ஹாபியத்தின் தோற்றம்

வஹ்ஹாபிய இயக்கத்தை தோற்றுவித்தவர் மதீனாவிற்கு கிழக்கிலுள்ள நஜ்த் நாட்டைச் சார்ந்த முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் என்பவராவார். மிகச் சிறந்த ஆலிம்களான இவரது தந்தை அப்துல் வஹ்ஹாப் அவர்களும், இவருடைய சகோதரர் சுலைமான் அவர்களும், மற்றும் இவருடைய ஆசான்களான ஷைக் முஹம்மது பின் சுலைமானுல் குர்தி, ஷைக் முஹம்மது ஹயாத்துஸ் ஸிந்தி ஆகியவர்களும் இவரைப் பற்றிக் கூறுகையில் "இந்த முஹம்மத் தானும் வழிதவறி, பிறமக்களையும் வழிகெடுப்பார்" என எச்சரித்துள்ளார்கள்.

ஹிஜ்ரி 1111ம் ஆண்டு பிறந்த இவர் ஆரம்பக் கல்வியை மக்கா, மதீனா இடங்களுக்குச் சென்று கற்றிருக்கிறார். இவர் தமது கல்விப் பருவத்திலேயே முஸைலமத்துல் கத்தாப், ஸஜாஹி அஸ்வதுல் அனஸி, துலைஹத்துல் அஸதி போன்ற போலி நபிகளின் வரலாறுகளை விருப்பிப் படித்துக் கொண்டிருப்பார்.

இவரது பிறந்தகமான நஜ்துவாசிகள் அறிவாற்றலில் மிகக் குறைந்தவர்களாக இருப்பதால் அவர்களது உள்ளங்களில் எதையும் விதைக்கலாம் என்பதை நன்கு தெரிந்துகொண்ட இவர், மக்கள் மத்தியில் மிகப்பெரும் மதிப்பைப் பெறவேண்டுமென விரும்பினார். அதற்கு ஒரே வழி நபித்துவம் ஒன்றுதான் என முடிவு செய்து, முன்னுள்ள நபிமார்கள் பெற்றிருந்த மதிப்பையும் நினைவு கூர்ந்து கொண்டிருந்தார்.

ஆனால், அண்ணல் நபி (ஸல்) அவர்களோடு நபித்துவ வாசலை அல்லாஹ் அடைத்துவிட்டான் என்பதை நன்கு புரிந்து கொண்ட இவர் தான் ஒரு முஜத்தித், முஜ்தஹித் என மக்கள் மத்தியில் பிரகடனம் செய்துகொண்டு, தனது 32ம் வயதில் (ஹிஜ்ரி 1143) தவ்ஹீத் எனும் போர்வையின் மூலம் தவறான பல புது கொள்கைகளுக்கு வித்திட்டார்.

ஐங்காலத் தொழுகைகளை நிலை நாட்டவேண்டும், ஜமாஅத்தைப் பேண வேண்டும், ஜும்ஆ நடத்தவேண்டும், ஜினா செய்தல் பெரும் பாவமாகும். வழிப்பறி செய்தலும் ஆகாத செயலாகும் எனும் நற்செயல்களை துணையாகக் கொண்டு தமது தீய செயல்களை மக்கள் மத்தியில் சன்னஞ்சன்னமாக புகுத்த ஆரம்பித்தார். ஆதலால் இவருக்கு மக்கள் மத்தியில் தனிப்பெரும் அந்தஷ்திருந்தது.

ஆரம்பகாலத்தில் சன்னஞ்சன்னமாக பரவிய இந்த வஹ்ஹாப்பியத் ஹிஜ்ரி 1150ம் ஆண்டிற்கு பிறகு மிக வேகமாகப் பரவ ஆரம்பித்தது.



இவர் தன்னைப் பின்பற்றிய உள்ளூர் வாசிகளுக்கு அன்சாரிகள் என்றும் வெளியூர் வாசிகளுக்கு முஹாஜிர்கள் என்றும் பெயர் சூட்டினார்.

கஷ்புஸ் ஸு"புஹாத் அன்காலிகில் அர்ளி, வஸ்ஸமாவாத் எனும் நூலை எழுதிய இவர் அதை மக்காவின் மாமன்னர் ஷரீப் ஹாலிபின் அதிகாரத்திற்குட்பட்ட சிற்றரசர் இப்னுஸ"ஊதுக்கு சமர்ப்பணம் செய்தார்.

அந்த நூலில் இந்த 600 ஆண்டுகளாக வாழ்ந்த ஜனங்கள் எல்லோரும் காபிர்கள் வானத்தின் கீழ் வாழும் அனைவரும் இணைவைப்பவர்களே! எனவே இவர்களை கொலை செய்பவர்களுக்கும் சொர்க்கம் கடமையாகும் என்றெல்லாம் எழுதியிருக்கிறார்.

இந்த வஹ்ஹாபி தனது கொள்கைகளுக்கு ஆதாரமாக குர்ஆன் ஷரீபில் காபிர்களுடைய விஷயத்தில் இறங்கிய வசனங்களை கூறிக் காட்டினார்.

ஆட்சி வெறி கொண்ட இப்னுஸ"ஊதுக்கு இவருடைய கொள்கைகள் ஆயுதங்களாகப் பயன்பட்டன. அதன் காரணமாக காட்டுமிராண்டித்தனமான ஆட்சி நடத்தி மன்னர் ஹாலிபின் அதிகாரத்திற்குட்பட்ட சிற்றரசுகளையெல்லாம் தனது அதிகாரத்திற்குட்பட்டதாக அமைத்துக் கொண்டார்.

இவரது கொடுங்கோலாட்சியின் வேதனையினாலேயே இந்த வஹ்ஹாபிய இயக்கத்தின் பக்கம் மக்கள் கூட்டம் கூட்டமாகச் சேரலாயினர்.

இப்னுஸ"ஊதின் ஆட்சி உச்சகட்டத்தை அடைந்திருக்கும் சமயம் இவருடைய குருவான வஹ்ஹாபி தனது 96ம் (ஹிஜ்ரி 1207) வயதில் காலமாகிவிட்டார்.

இருப்பினும் நாளுக்கு நாள் இப்னுஸ"ஊதின் ஆதிக்கம் வலுவடைந்து கொண்டே வந்தது. அதன் காரணமாக வஹ்ஹாப்பியப் பட்டாளங்கள் உருவாகி விட்டன. அவை ஹிஜ்ரி 1217ம் ஆண்டு தாயிப் நகருக்குள் புகுந்து பெண்கள், சிறுவர், குழந்தைகள், வயோதிபர், தொழுபவர் என்றெல்லாம் பார்க்காமல் வெறித்தனமான முறையில் எல்லோரையும் கொலை செய்து தாயிப் நகரையே வெட்ட வெளியாக ஆக்கிவிட்டன அப்பட்டாளம்.

ஆயிரக்கணக்கான புகாரி, முஸ்லிம் போன்ற ஹதீதுக் கிரந்தங்களும், பிக்ஹ்கிதாபுகளும் வீதிகளில் வீசப்பட்டு நடப்போரின் கால்களில் மிதிபட்டுக் கொண்டிருந்தன.



தாயிபில் தங்களின் பேயாட்டத்தை முடித்துக்கொண்ட அவ்வஹ்ஹாபியப் படைகள் மக்காவை நோக்கி முன்னோக்கின. ஆனால் அப்போது ஹஜ்ஜு"டைய காலமாதலால், எகிப்து டமாஸ்கஸ், பலஸ்தீன், ஜோர்டான் முதலிய பகுதி மக்கள் ஹஜ்ஜிற்காக மக்கா வந்திருப்பார்கள். இப்போது மக்காவை தாக்கினால் வெற்றி கொள்வது சிரமம் என்றெண்ணி பேசாதிருந்து விட்டார்கள்.

இந்த வழிகெட்ட வஹ்ஹாபியப் பட்டாளங்களால் தாயிப் நகரில் ஏற்பட்ட கோர நிகழ்ச்சிகளை கண்டும், கேட்டுமிருந்த மக்காவாசிகள், இவர்களிடம் தூதுக் குழு ஒன்றை அனுப்பி கட்டுப்பட்டு விடுவதாகச் சொன்னார்கள்.

அதன் பிரகாரம் ஹிஜ்ரி 1218ம் ஆண்டு முஹர்ரம் மாதம் 8ம் நாள் வஹ்ஹாபிகள் மக்காவிற்குள் பிரவேசித்தார்கள். மன்னர் ஷரீப்ஹாலி பின் சகோதரர் அப்துல் முஈன் அவர்களை தங்களது முகாமிற்கு தளபதியாக அமைத்துக் கொண்டார்கள். அவரும் மக்காவசிகள் நலன்கருதி அப்பதவியை ஏற்றுக்கொண்டார்.

இந்த வஹ்ஹாபிகள் 14 நாட்கள் மக்காவில் தங்கியிருந்து, மக்கா வாசிகளை தௌபா செய்யவைத்து புதிதாக இஸ்லாத்தை தழுவ வைத்தார்கள். (தங்களைத் தவிர்த்துள்ளவர்கள் காபிர்கள் என்பது வஹ்ஹாபியக் கொள்கைகளில் ஒன்றாகும்.)

அடுத்து ஜித்தாவிற்குச் சென்று முற்றுகையிட்ட வஹ்ஹாபியப் பட்டாளத்தை மன்னர் ஷரீப் ஹாலிபின் படையினர் பீரங்கித் தாக்குதல் நடத்தி தோல்வியுறச் செய்துவிட்டனர். அதன் காரணமாக 18 நாட்களுக்குப் பிறகு ஜித்தாவிலிருந்து திருப்பிவிட்டார்கள் வஹ்ஹாபிகள்.

மன்னர் ஹாலிப் அதே ஆண்டு 1218 ரபீஉல் அவ்வல் மாதத்தில் ஜித்தாவின் கவர்னர் ஷரீப்பாச்சா துணையுடன் பெரும்படை திரட்டிக்கொண்டு மக்காமீது போர் தொடுத்து வெற்றிகொண்டு, வஹ்ஹாபிகளை மக்காவிலிருந்து அப்புறப்படுத்தி விட்டார். அதன் காரணம் அவர்கள் மக்காவைச் சூழ உள்ள மற்ற பகுதிகளை தமது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்துவிட்டார்கள்.

இதையொரு பெரும் பலமாகவைத்து, வஹ்ஹாபிகள் 1220ம் ஆண்டு மக்காவை மீண்டும் முற்றுகையிட்டார்கள். மக்காவிற்குள் எந்தவித உணவுப் பொருட்களும் செல்லவிடாமல் தடுத்துக் கொண்டார்கள்.

இதன் காரணமாக மக்காவாசிகள் பசிக்கொடுமை தாங்க முடியாமல் நாயிறைச்சி, செத்த பிணம் போன்றவற்றையெல்லாம் உண்ண ஆரம்பித்து விட்டார்கள்.

**ஆதலால் நிலைமையை சமாளிக்க முடியாது எனத் தெரிந்த மன்னர் ஷரீப் ஹாலிப் வஹ்ஹாபிகளிடம்.**

**மக்காவாசிகளை நோவினை செய்யக்கூடாது. மக்காவின் அதிகாரங்கள் எனது கட்டுப்பாட்டின் கீழேயே அமைந்திருக்கும் எனும் நிபந்தனைகளுடன் ஒரு தூதுக் குழுவை சமாதான ஒப்பந்தத்திற்காக அனுப்பி வைத்தார்.**

இதை நல்ல வாய்ப்பாகக் கருதிக்கொண்டு அந்த சமாதான ஒப்பந்த நிபந்தனை களையும் ஏற்றுக்கொண்டு ஹிஜ்ரி 1220ம் ஆண்டு மக்காவிற்குள் நுழைந்து விட்டார்கள் வஹ்ஹாபிகள். அதன்பிறகு மதீனாவையும் கைப்பற்றினார்கள்.

மேலும் எகிப்து, ஜோர்டான், சிரியா போன்ற பகுதிகளிலிருந்து ஹஜ்ஜிக்காக வரும் ஜனங்களை தடை செய்தார்கள். தங்களது வஹ்ஹாபியக் கொள்கைகளை ஏற்றே ஆகவேண்டுமென மக்களை நிர்ப்பந்தம் செய்தார்கள்.

இவ்வாறு தொடர்ந்து 7 ஆண்டுகள் ஆட்சிசெய்த இவர்களை, எகிப்து நாட்டு மன்னர் சுல்தான் மஹ்மூதின் உத்தரவுக்கிணங்க மந்திரி முஹம்மது அலி பாட்சா பெரும் படையுடன் வருகை தந்து இந்த வஹ்ஹாபிகளோடு கடும் போர் செய்து மக்கா, மதீனா பகுதிகளையெல்லாம் வெற்றிகொண்டு, வஹ்ஹாபிகளை அழித்தொழித்துவிட்டு ஹிஜ்ரி 1235ம் ஆண்டு எகிப்து திரும்பி விட்டார்.

லா ஹவ்ல வலாகுவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அளீம்.

பித்தனத்துல் வஹ்ஹாபிய்யா, அல்பஜ்ருஸ் ஸாதிக் அத்துரருஸ்ஸனிய்யா என்ற அரபு நூல்களிலிருந்து இந்த வரலாறு சுருக்கப்பட்டதாகும்.

## நஜ்தைப்பற்றி நபிகளார்

ஒருமுறை அண்ணல் நபி (ஸல்) அவர்கள், இறைவா! எங்களது ஷாமிலும், எமனிலும் நீ பரக்கத் செய்வாயாக! என பிரார்த்தனை செய்தபோது, சஹாபாக்கள், யாரசூல்லாஹ்! எங்களது நஜ்திலும் எனச் சேர்த்துக் சொல்வீர்களாக! என வேண்டினார்கள். ஆனால் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் முன் பிரார்த்தனை செய்தது போன்றே பிரார்த்தனை செய்தார்கள். அப்போதும் சஹாபாக்கள் நஜ்தையும் சேர்க்குமாறு வேண்டினார்கள்.

அப்போது அந்த நஜ்த் பகுதியில் பித்னாக்களும் பூகம்பங்களும் ஏற்படும். மேலும் அந்தப் பகுதியிலேயே ஷைத்தானின் கூட்டமும் அவனின்



உதவியாளர்களும் வெளியாவார்கள் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நூல் மிஷ்காத் பக்கம் : 582
அறிவிப்பவர், இப்னு உமர் (ரலி)

## வஹ்ஹாபிகளைப் பற்றி நபிகளார் :

சொல் அழகும், செயல் தீங்குமுடைய சில கூட்டம் எனது சமுதாயத்தில் தோன்றுவார்கள். அவர்கள் குர்ஆனை ஓதுவார்கள். ஆனால் அது அவர்களின் தொண்டைக்குழிகளைக் கடக்காது. (அதாவது அதை இறைவன் ஏற்றுக்கொள்ளமாட்டான்) வேட்டை மிருகத்தின் மேல் எறியப்படும் அம்பு வெளியாகுவதைப் போல் அவர்கள் தீனைவிட்டும் வெளியோறுவார்கள். வில்லிலுள்ள கயிற்றின் பக்கம் அம்பு திரும்பி வரும் வரை அவர்கள் தீனின் பக்கம் திரும்பமாட்டார்கள். (எய்து விடப்பட்ட அம்பு வில்லின் கயிற்றில் தானாக திரும்புவது எக்காலம்? அது போன்றே இவர்களும் தீனின் பக்கம் திரும்பமாட்டார்கள்)

அல்லாஹ்வின் படைப்புக்களிலேயே மிகக் கெட்டவர்களான இவர்களை கொலை செய்தவர்களுக்கும், இவர்களால் கொலை செய்யப்பட்டவர்களுக்கும், சோபனம் (நன்மை)யுண்டு. இவர்கள் அல்லாஹ்வின் வேதத்தின் பக்கமே மக்களை அழைப்பார்கள். ஆனால் அவர்கள் நம்மைச் சார்ந்தவர்களல்ல. இவர்களிடம் போர் புரிபவர்கள் உம்மத்துக்களிலேயே அல்லாஹ்விடம் மிகச் சிறப்பிற்குரியவர்களும், அன்பிற்குரியவர்களுமாவார்கள் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சஹாபாப் பெருமக்களிடம் கூறியபோது,

யாரசூலல்லாஹ்! அவர்களுடைய அடையாளம் என்ன? எனக் கேட்டார்கள் சஹாபாக்கள்.

அப்போது, அவர்கள் தலையை மொட்டையடித்துக் கொள்வார்கள் என்று கூறினார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.

நூல் மிஷ்காத் பக்கம் : 308
அறிவிப்பவர் : அபூஸயீதுல் குத்ரி (ரலி)
அனஸ் பின் மாலிக் (ரலி)

இவர்கள் அடையாளம் தலையை மொட்டையடிப்பது எனும் அண்ணல் நபி (ஸல்) அவர்களுடைய சொல் இவர்கள் தான் வஹ்ஹாபிகள் என விளங்க வைக்கிறது. ஏனெனில், இந்த வஹ்ஹாபிகள்தான் நவீனவாதிகள் தலை



மொட்டையிட வேண்டுமென ஏவியவர்களாவார்கள். எனவே வஹ்ஹாபிகளுக்கு மறுப்புத் தெரிவிப்பதற்கு இதற்கு மேல் இனியொரு நூல் எழுத வேண்டிய தேவையில்லையென்று ஹலரத் அப்துர்ரஹ்மானுல் அக்தல் அவர்கள் கூறுகிறார்கள். (நூல் அத்துரருஸ்ஸனிய்யா, பக்கம் : 54)

வஹ்ஹாபிகள்தான் தம்மை ஏற்றுக்கொள்ளும் அனைவரையும் (பெண்கள் உட்பட) அவசியம் மொட்டை அடித்தே ஆகவேண்டுமென வற்புறுத்தினார்கள். காரணம் இதுவரை முளைத்துள்ள முடிகள் குப்ரிய்யத்தில் இருந்தபோது வளர்ந்தவை, இப்போது புதிதாக இஸ்லாத்தில் வந்து விட்டதால் அந்த முடிகளை அவசியம் எடுத்தாக வேண்டுமென வற்புறுததினார்கள்.

(நூல், அத்துரருஸ்ஸனிய்யா பக்கம் : 54)

## வஹ்ஹாபிகளைப் பற்றி அல்லாமா இப்னுல் ஆபிதீன் :

நஜ்த் வாசியான முஹம்மதிப்னு அப்துல் வஹ்ஹாப் என்பவரை பின்பற்றியவரே வஹ்ஹாபிகளாவார்கள். ஹன்பலி மத்ஹபைச் சார்ந்தவர்கள் எனக் காட்டிக் கொள்ளும் இவர்கள் தாங்கள்தான் முஸ்லிம்கள், மற்றவர்களெல்லாம் முஷ்ரிக்குகள் என நம்பியிருப்பதோடல்லாது, சுன்னத்வல்ஜமாஅத்தைச் சார்ந்தவர்களை கொலை செய்வது கூடும் என்றும் கூறிக்கொள்வார்கள்.

புரட்சியின் மூலம் ஒரு சில காலங்கள் மக்கா மதீனாவை ஆண்ட இவர்களை ஹிஜ்ரி 1233ம் ஆண்டு விரட்டியடிக்கப்பட்டு உண்மையான முஸ்லிம்கள் மக்கா, மதீனாவை ஆண்டார்கள்.

இவ்விஷயத்தை நூலாசிரியர், 'நமது காலத்திய ஹவாரிஜ்கள்ான வஹ்ஹாபிகள்' என, தலைப்பில் சொல்லியிருப்பதால்,

பெயரளவில் மாறுபட்டிருந்தாலும், கொள்கையளவில் ஹவாரிஜ்களும், வஹ்ஹாபிகளும் ஒன்றுபட்டிருக்கிறார்கள் என்பதை தெளிவாக விளங்கிக் கொள்ளலாம். (நூல், ரத்துல்முக்தார் - வா, 4 - பக்கம் : 262)

## வாஹ்ஹாபியக் கொள்கைகள் சில :

01. தாங்கள் ஹன்பலி மத்ஹபைச் சார்ந்தவர்கள் எனக் காட்டிக் கொண்டே மத்ஹபுகளை மறுப்பது, மத்ஹபுகளைத் தோற்றுவித்த இமாம்களை தூசனிப்பது.



02. தங்களது கொள்கைகளுக்கு விரோதமானவர்களை கொலை செய்து விடுவதோடு, அவர்களின் உடமைகளையும் தங்களுக்கு சொந்தமாக்கி கொள்ளுதல்.
03. மனிதருக்கிருப்பதைப் போன்ற சடலம் இறைவனுக்குமுண்டு எனக் கூறுதல்.
04. அண்ணல் நபி (ஸல்) அவர்கள், மற்ற நபிமார்கள், வலிமார்களுக் குண்டான அந்தஸ்தை குறைவாகக் காணுதல். இவர்களைக் காண எமது கையிலுள்ள, குச்சி, தடி மேலானதாகும். ஏனெனில் இந்தத் தடியால் (பாம்பு, தேள் போன்ற) விஷ ஜந்துக்களை விரட்ட முடியும். ஆனால் அண்ணல் நபி (ஸல்) அவாகளும் மற்றவர்களும் மரணித்து விட்டார்கள். ஆதலால் அவர்களால் எந்தப் பயனுமில்லை. அவர்களுடைய கப்ருகளை கழிப்பிடங்களாக மாற்றுவது (நஊது பில்லாஹி)
05. தலாயிலுல் கைராத் போன்ற சலவாத்துக் கிதாபுகளையும் ராத்தீபு, மௌலூதுகள் ஓதுவதையும் தடைசெய்வது.
06. ஐங்காலத் தொழுகைக்குப் பின்பு கூட்டாக துஆ ஓதுவதைத் தடுப்பது.
07. ஸக்காத் நிதியை தன்னிஷ்டப்பிரகாரம் பங்கீடு செய்வது.
08. தானும், தன்னைச் சார்ந்தவர்களுமே முஸ்லிம்கள், மற்றவர்களெல்லாம் முஷ்ரிக்குகள் ஆவார்கள்.
09. அன்பியாக்கள், அவ்லியாக்கள், மலக்குகளை மூலமாக வைத்து உதவி தேடுதல் ஷிர்க்கும், குப்ருமாகும்.
10. குர்ஆனிற்கு தன்னிஷ்டப்பிரகாரம் விளக்கம் கூறவேண்டும். குர்ஆனிலிருந்து அவரவர் விளங்கிக் கொண்ட பிரகாரம் தீர்ப்புக் கூறவும், அமல் செய்யவும் செய்யலாம்.
11. இஸ்ரா.்.வும், மி.்.ராஜும் கனவுகளே.
12. மு.்.ஜிஸா மற்றும் கராமத்துக்களை நிராகரிப்பது.
13. கப்ரு ஸியாரத்திற்குச் செல்வதை தடுப்பது.
14. தராவீஹ் 8 ரக்அத்துகளே தொழ வேண்டும்.
15. பள்ளிவாசல்களுக்கு, ஜும்ஆ, மற்றும் ஜமாஅத்துத் தொழுகைகளுக்கு பெண்கள் வரவேண்டும் என நிர்ப்பந்தம் செய்வது.

# அஹ்லுல் சுன்னத் வல்ஜமாஅத்

இமாம் அபுல் ஹஸன் அல்அஷ்அரி, இமாம் அபூமன்சூர் அல்மாதுரீதி ஆகிய இரு இமாம்களின் கொள்கைகளை பின்பற்றுகின்றவர்களைத்தான் 'அஹ்லுல் சுன்னத் வல் ஜமா அத்'தினர் எனச் சொல்லப்படும். ஆகவே அவ்விரு இமாம்களின் வரலாற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.

## இமாம் அல் அஷ் அரி :

இவர்களுடைய முழுப்பெயர் அபுல்ஹஸன் அலிய்யுல் அஷ்அரி என்பதாகும். ஷாபிஈ மத்ஹபைச் சார்ந்த இவர்கள் ஹிஜ்ரி 260ம் ஆண்டு பஸராவில் பிறந்தார்கள். இவர்களுடைய முன்னோர்கள் எமன் நாட்டைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், பெற்றோர்கள் பஸராவில் வாழ்ந்து வந்தார்கள்.

பஸராவை விட்டு பக்தாதிற்குச் சென்ற இவர்கள் ஹிஜ்ரி 324ம் ஆண்டு தமது 64ம் வயதில் வபாத்தாகும் வரை அங்கேயே வாழ்ந்தார்கள்.

மு.ஃ.தஜிலாக்களின் மிகப் பெரும் தலைவரான அபூ அலிய்யில் ஜுபாயியிடம் இல்முல் கலாமைக் கற்ற இவர்கள், அவர் சுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கைகளுக்கு அப்பாற்பட்டவர் எனத் தெரிந்தவுடன் அவரை விட்டும் விலகியதோடு, அவருக்கு எதிராக தவறான கொள்கைகளுக்கு தக்க பதில்களும் கொடுத்தார்கள்.

இவர்கள் அக்காலத்தில் பக்தாது நகரில் மிகப் பிரசித்தி பெற்ற இமாம்களான ஜகரிய்யா பின்பஹ்யா, அபூஹலிபத்துல் ஜுமஹி, ஸஹ்லும்னுஷாஹ், முஹம்மதிப்னு ய.ஃகூப் அப்துர்ரஹ்மானிப்னு ஹலப் போன்ற மேதைகளிடம் கல்வி கற்றார்கள்.

மூஜஷ், கித்தாபுல் இபானத் எனும் இரு பெரும் கிரந்தங்களை கோர்வை செய்தார்கள். இவ்விரு கிரந்தங்களும் மு.ஃ.தஜிலா போன்றோருக்கு மறுப்பளிக்கும் சிறந்ததோர் கிரந்தங்களாகும்.

இவர்கள் இஷாத் தொழுகைக்குச் செய்த வுழுவால் இருபதாண்டு காலங்கள் சுபுஹுத் தொழுகையை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

தனது பாட்டனார் பிலாலுப்னு அபுத்தர்தா என்பவர் தமது சந்ததிகளுக்காக



வக்பு செய்த சொத்திலிருந்து வந்த சொர்ப்ப வருவாயை வைத்தே குடும்ப வாழ்க்கையை மிகச் சிக்கனமாக நடத்தி வந்தார்கள்.

## அறிஞர்கள் தந்த புகழாரம் :

இவர்களுடைய ஆசிரியர் அபூஇஸ்ஹாக் இஸ்பர் ராயீனி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். நான் அபுல் ஹஸனில் பாஹ்லி உடைய சமூகத்தில் கடல் நீரிலிருந்து ஓர் துளி போன்றே இருக்கிறேன்.

அபுல் ஹஸனில் பாஹ்லி அவர்கள் சொல்கிறார்கள். நான் அபுஸ்ஹஸனுல் அஸ்அரிய்யி அவர்களுடைய சமூகத்தில் கடல்நீரில் ஒரு துளியே என்று...

இமாம் அஷ்அரிய்யி அவர்களுடைய மகத்துவத்தை அறிய விருப்புவோர் ஹாபிஸ் அபுல் காஸிம் இப்னு அஸாகிர் (ரஹ்) அவர்கள் எழுதியுள்ள 'தப்யீனுல்முப்திரி' எனும் நூலைப் பார்க்கட்டும். எங்களது ஆசிரியர்கள் இந்நூலை பார்வையிடுமாறு மாணவர்களை ஏவுவார்கள்.

## இமாமவர்களின் குடும்பம் பற்றி இறை வாக்கும் இறைத்தூதர் வாக்கும் :

விசுவாசிகளே! உங்களில் யாரேனும் தங்கள் மார்க்கத்திலிருந்து மாறிவிட்டால் (அதனால் அல்லாஹ்விற்கு எந்த நஷ்டமும் இல்லை. உங்களைப் போக்கி விட்டு) வேறு சமுதாய மக்களை அல்லாஹ் அமைத்து விடுவான். அவர்களை அல்லாஹ் நேசிப்பான். அவர்களும் அல்லாஹ்வை நேசிப்பார்கள். அவர்கள் விசுவாசிகளிடம் பணிவாக நடப்பார்கள். நிராகரிப்போரிடம் வெறுப்பாக இருப்பார்கள். இறை பாதையில் போர் புரிவார்கள். இழிவைக் கண்டு அஞ்சமாட்டார்கள். இது அல்லாஹ்வின் அருளாகும். அவன் நாடியவர்களுக்கு இதை நல்குகிறான். அவன் மிக விசாலமானவனும், (யாவரையும்) நன்கறிந்தோனுமாவான்.

(அல்குர்ஆன் - 5 : 54)

இவ்வசனம் மூலமாக, நபிகளாரின் மரணத்திற்குப் பின்பு ஒரு சிலர் மார்க்கம் மாறி விடுவார்கள். அப்போது மார்க்கப் பற்றும், தன்னையே நேசிப்போரும், தானும் அவர்களை நேசிப்போனுமான ஓர் உன்னத மக்களை உலகத்தில் நிலை பெறச் செய்வான் அல்லாஹ் என்பதை அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு முன்னறிவிப்பாகக் கூறுகிறான் அல்லாஹ். அவ்வாறான உன்னத மக்களை அஷ்அரீகள் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவில்கிறார்கள்.



அல்லமா ஹாக்கிம் அவர்கள் தமது ஸஹீஹில் ரிவாயத்துச் செய்வதாக தப்ஸிர் ஜலாலைன் முதலிய தப்ஸீர்களில் எழுதுகிறார்கள்.

## இமாம் அபூமன் சூரில்மாதுரீதி :

முஹம்மத் எனும் பெயர் கொண்ட இவர்கள் சமர்கந்திலுள்ள மாதுரீத் என்ற ஊரைச் சார்ந்தவர்களாவார்கள். ஹனபீ மத்ஹப்பைப் பின்பற்றிய இவர்கள் இந்தத்துறை பற்றிய அரிய பல நூல்களை எழுதியிருக்கிறார்கள். தர்க்க மேடைகளில் எதிரிகளை வாயடைக்கச் செய்வதில் வல்லவராகத் திகழ்ந்தார்கள்.

கல்வி பேணுதல், வணக்கம், வீரம் போன்ற நற்குணங்கள் நிறைந்த இமாம் அவர்கள், நஸீருப்னு யஹ்பல் பல்ஹி, முஹம்மதிப்னு முகாதிலுர்ராஜி போன்ற பெரியோர்களிடத்தில் கல்வி கற்றார்கள்.

இவர்களுடைய வாரிசுகளாம் அபூபக்கர் முஹம்மது, அபூஅஹ்மது எனும் இரு மேதைகளும் பிக்ஹ் கலைக் களஞ்சியங்களாக விளங்கினார்கள்.

இமாம் அல்அஷ்அரி அவர்கள் இறந்து 09 ஆண்டுகளுக்கப் பின்பு ஹிஜ்ரி 333ல் மரணமான இவர்கள் சமர்க்கந்தில் (சொந்த ஊரில்) அடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். இன்னாலில்லாஹி வஇன்னாஇலைஹி ராஜிஊன்

## பெயரின் காரணம் :

அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத் எனப் பெயர் தோன்றக் காரணம், நமது அபுல் ஹஸனுல் அஷ்அரி (ரஹ்) அவர்கள், மு.ஃ.தஜிலாக்களின் இமாம்களில் ஒருவரான அபூஅலிய்யில்ஜுப்பாயியிடம் மாணவராக இருந்தபோது, ஒரு நாள் அடியார்களுக்கு இணக்கமானதையே இறைவன் அடியார்களுக்கு அமைத்துத் தருவது கடமையாகும் எனும் மு.ஃ.தஜிலாக் கொள்கையை மாணவர்களிடம் ஜுப்பாயி அவர்கள் சொன்னபோது அல்அஷ்அரி அவர்கள் ஜுப்பாயியிடம் பல கேள்விகளைத் தொடுத்தார்கள்.

**கேள்வி :**

மூன்று சகோதரர்களில் ஒருவர் நல்லவராகவும் இன்னொருவர் கெட்டவராகவும், ஒருவர் சிறுவராகவும் இறக்கிறார்கள். அப்போது இவர்களை அல்லாஹ் என்ன செய்வான்?



**பதில் :**

நல்லவனுக்கு நற்கூலியையும், தீயவனுக்கு தண்டனையையும் கொடுப்பான். சிறுவனை நன்மையும், தண்டனையுமின்றி விட்டுவிடுவான்.

**கேள்வி :**

நல்லவனுக்கு நற்பலனும், தீயவனுக்கு தண்டனையும் சரியே! ஆனால் சிறுவனோ இறைவா! நான் பெயரியவனாகும் வரை வாழ்ந்திருந்தால் நன்மைகள் பல செய்து உன்னிடம் நற்பலன்கள் பெற்றிருப்பேனே! அவ்வாறிருக்க எனக்கு நன்மை பயக்க வல்லதைச் செய்யாமல் சிறுவயதிலேயே ஏன் மரணிக்கச் செய்வித்தாய்? எனக் கேட்டால் இறைவனின் பதில் என்ன?

**பதில் :**

சிறுவனாக உன்னை மௌத்தாக்கியதே உனக்கு நன்மையாகும். பெரியவனாக உன்னை வாழ வைப்பின் நீ பாவியாக இருப்பாய் என்பது எனது அறிவாகும் என்று சொல்வான்.

**கேள்வி :**

அப்படியானால் பாவியான பெரியவன் ஒருவன் இறைவா! என்னை ஏன் பெரியவனாக ஆக்கினாய்? சிறுவனாகவே என்னை நீ மௌத்தாக்கியிருந்தால் நான் நரகமும், சொர்க்கமும், இன்பமும், துன்பமும் இல்லாமல் இருந்திருப்பேனே! எனக்கு ஏன் நீ நல்லதைச் செய்யவில்லை? எனக் கேட்டால் அல்லாஹ் என்ன பதில் சொல்வான்?

**பதில் :**

மௌனம்...


ஜுப்பாயி அவர்களால் இக்கேள்விக்கு சரியான பதிலைச் சொல்ல முடியாததைக் கண்ட அல்அஷ்அரி அவர்களும், அவர்களைச் சார்ந்தோரும் அங்கிருந்து நீங்கி மு.ஃ.தஜிலாக் கொள்கைகளை ஒழிப்பதிலும் நபிகளாரின் வழிமுறைகளையும், சஹாபாக்களின் வாழ்வையும் பின்பற்றவும், போதிக்கவும் செய்தார்கள்.

எனவே நபிகளாரின் சுன்னத்தையும், சஹாபாக்களாகிய ஜமாஅத்தையும் பின்பற்றியதால் 'அஹ்லுல் சுன்னத் வல் ஜமாஅத்' எனப் பெயர் சூட்டப்பட்டார்கள் இவர்கள்.

சமுதாயத்தில் பிளவு ஏற்படும் எனும் தலைப்பில் சொல்லப்பட்ட ஹதீஸில் நானும் எனது தோழர்களும் எக்கொள்கைகளைப் பின்பற்றுகிறோமோ அக்கொள்கைகளை ஏற்போரே ஏற்றமுடையோரும், சொர்க்க வாசிகளுமாவார்கள் எனும் ஹதீதை நினைவில் நிறுத்தி,

சுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கைகளை ஏற்று மாற்றாரின் கொள்கைகளைப் புறக்கணித்தும் வாழும் தௌபீக்கை வல்ல அல்லாஹ் நன்மனைவர்களுக்கும் தந்தருள் புரிவானாக ஆமீன்.

நமது கொள்கைகளுக்கும் நாம் செய்யும் அமல்கள் (அதாவது மற்றவர்களால் ஒதுக்கப்படுகின்ற விஷயங்கள்)களுக்கான தக்க ஆதாரங்களையும் சுன்னத் வல் ஜமா அத்தினர்களின் மேதைகள் தரும் ஆதாரங்கள் மூலமாக ஆராய்வோமாக.





## ஹதீஸ் – சுன்னத் என்றால்?

ஹதீஸ் என்பது நான்கு வகையாகும் (1) அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சொல் (2) அவர்களின் செயல் (3) அவர்களுடைய உறக்கம் மற்றும் விழிப்பின் போதுள்ள அசைவும், அசைவற்ற தன்மையும் (4) அடுத்தவரின் செயலைக் கண்டு அவர்கள் மௌனம் மேற்கொண்டது. (அதாவது ஒருவர் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சமூகம் வருகை தந்து, ஒரு விஷயத்தை சொல்லவோ, செய்யவோ செய்தபோது அதை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கண்டிக்கவோ, வெறுக்கவோ, தடுக்கவோ செய்யாது மௌனமாக இருந்தது.)

இந்த நான்கு விஷயங்களைத்தான் "ஹதீஸ்" என்றும் "சுன்னத்" என்றும் சொல்லப்படுகிறது. அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை நடைமுறைகளுக்கு மட்டும் சுன்னத் எனச் சொல்லப்படுவதுமுண்டு.

### ஹதீதுக்கலை :

ஹதீதுக்கலை என்பது இஸ்லாத்தில் அதிமுக்கியமானதும் அவசியமானதுமாகும். ஆதலால் தான் அக்கலையில் மிகப் பெரும் பாண்டித்தியம் பெற்ற இமாம்கள் அதற்கென சில சட்ட திட்டங்களை முறையாக இயற்றியுள்ளார்கள். அவை;

01. அதை ஏற்றுக்கொள்வதற்கு அது ஏற்றதாக இருக்க வேண்டும்.

02. திருக்குர்ஆன் ஷரீபில் இருப்பதைப் போன்ற 'நாஸிஹ்' 'மன்சூஹ்' (அதாவது சொன்ன சட்டத்தை மாற்றக்கூடியது. சொன்ன சட்டம் மாற்றப்பட்டது) எனும் இருவகை அமைப்புக்களுண்டு.

03. ஹதீதில் வரும் பொதுப்பதத்தின் அர்த்தம் அதன் சட்டங்களையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். ஆனால் தகுந்த ஆதாரம் இருப்பின் அந்தப் பொதுப்பதம் தரும் சட்டத்திலிருந்து மாற்றம் செய்து கொள்ளலாம்.

உதாரணமாக;

A - மழையின் மூலமாக விளையும் பொருளுக்கு பத்தில் ஒன்று ஸக்காத்துக் கொடுப்பது கடமையாகும்.

B - முன்னூறு ஷாஹுக்கும் (சென்னை படிக்கு 450 படிகள், 780Kg) குறைவானதில் ஸக்காத் கிடையாது எனும் இரண்டு ஹதீதுகளையும் புகாரி, முஸ்லிம் இமாம்கள் அறிவிக்கின்றார்கள்.



C - காய்கறிகளில் ஸக்காத்து இல்லை எனும் இந்த ஹதீதை இமாம் தராகுத்னி அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

'மழையின் மூலம் விளையும் பொருள்' எனும் முந்திய ஹதீதுடைய வார்த்தையின் பொதுக் கருத்து, பிந்திய இரண்டு ஹதீதுகளையும் உள்ளடக்கி, அவைகளிலும் ஸக்காத்து உண்டு எனக்காட்டுகிறது. ஆனால் அந்தப் பொதுக் கருத்திலிருந்து பிந்திய இரண்டு ஹதீதுகளின் கருத்துக்களும் (B - 450 படிக்கும் குறைந்த அளவு C - காய்கறிகள்) நீக்கப்பட்டு விடுகின்றன.

சீமான் தான் கொண்ட கடனுக்கு சாக்குப் போக்கு சொல்வது அநீதமாகும்.
புகாரி, முஸ்லிம்

இந்த ஹதீதில் சீமானல்லாதவர்கள் சாக்குப் போக்கு சொல்வது அநீதமாகாது என விளங்கிக்கொள்ள வாய்ப்பிருக்கிறது. அவ்வாறு விளங்குவது விபரீதமாகும்.

எனினும் இம்மாதிரியான அர்த்தங்களும், விளக்கங்களும் அதற்கென உள்ள விதிமுறைகளுக்குட்பட்டதாக இருப்பின் அதுவும் மார்க்க சம்பந்தப்பட்ட விதிக்கு ஆதாரமாகும்.

சுன்னத் ஜமாஅத்தினுடைய ஹதீதுக்கலை மேதைகள் தர்க்கங்களுக்கு இடமில்லாதவாறு ஒருமித்துக் கூறிய இந்த சட்டங்களின் அடிப்படையில் இன்று முஸலிம்களிடையே ஓதப்பட்டு வரும் மௌலூது, ராத்திபுகள் பற்றியும், கப்ர்ஜியாரத்து, ஐங்காலத் தொழுகைக்குப் பின்பு கூட்டாகச் சேர்ந்து பிரார்த்தனை புரிவது. தல்கீன் சொல்லிக் கொடுப்பது, குர்ஆன் ஓதி ஈஸால் தவாபு செய்வது போன்ற செயல்களெல்லாம் பேணவேண்டியவைகளா? ஒதுக்கப்படவேண்டியவைகளா? என்பது பற்றி ஆராய்வோம்.

ஏனெனில் இவைகளெல்லாம் மார்க்கத்திற்கு புறம்பான பித்அத்தான செயல்கள் என சிலர் வாதிக்கின்றனர். ஆதலால் இஸ்லாமியப் பெருமக்களுக்கு இவைபற்றிய தெளிவான விளக்கங்களை முடிவாக தெரிவிப்பது அறிஞர் பெருமக்களின் கடமையாகும்.

### பித்அத் :

நிச்சயம் விஷயங்களில் சிறந்தது அல்லாஹ்வின் வேத நூலும், நடைமுறைகளில் சிறந்தது அண்ணல் நபி (ஸல்) அவர்களின் நடைமுறையுமாகும். விஷயங்களில் கெட்டது புதிதாக ஏற்படுத்தப்பட்டவைகளாகும். அவையனைத்தும் தவறானவையே.
முஸ்லிம்.



இந்த ஹதீதில் புதிதாக ஏற்படுத்தப்பட்டவை (பித்அத்) அனைத்தும் தவறானவையே எனக் கூறப்படுவதால் 'பித்அத்' எனும் பதத்திற்கு முறையான பொருள் என்ன? அது சம்பந்தப்பட்ட விளக்கங்கள் யாவை? எனப் பார்ப்போம்.

'பித்அத்து' எனும் அரபிப் பதத்திற்கு புதிதாக உண்டுபண்ணப்பட்ட பொருள் எனச் சொல்லப்படும், திருக்குர்ஆனில் "கல்மாகுன்த்து பித்அம்மினர்ருசுலி" "நான் நபிமார்களில் புதியவர் அல்ல. நபியே நீர் கூறுவீராக! என்று அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் அல்லாஹ் கூறுகிறான்.

இந்த திருக்குர்ஆனின் வசனம் பித்அத் என்பதற்கு புதிதாக தோற்றுவிப்பது எனப்பொருள் என்பதை தெளிவாக்கிக் காட்டுகிறது.

எனவே, மேற்காணும் இமாம் முஸ்லிம் அவர்கள் அறிவிக்கும் ஹதீதில் புதிதாக தோற்றுவிப்பவை அனைத்தும் தவறான வழியைச் சார்ந்தவை எனக் கூறவேண்டிய நிலையேற்படுகிறது. ஆனால் அவ்வாறு சொல்வது முறையற்றதாகும்.

ஏனெனில் புதிதாக தோற்றுவிப்பவைகளில் பல நற்செயல்களுமுண்டு. அண்ணல் நபி (ஸல்) அவர்களுடைய காலத்தில் இல்லாத பல நல்ல செயல்களை சமுதாயம் இப்போது பின்பற்றி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

உதாரணமாக,

ரமழான் மாதம் 30 நாட்களும் தராவீஹ் தொழுகையை இன்று ஜமாஅத்தாக நிறைவேற்றப்படுகிறது.

மார்க்க கல்வியை போதிப்பதற்காக மத்ரஸாக்கள் கட்டப்படுகின்றன.

திருக்குர்ஆன் ஷரீபின் இப்போதைய அமைப்பு.

இவைகளெல்லாம் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இல்லாதவை என்பதற்காக எங்ஙனம் தவறான வழிகளாகும்?

அல்லாஹ்வும், ரசூலும் பொருந்திக் கொள்ளாத துன்மார்க்கத்தைச் சார்ந்த பித்அத்துக்களை ஒருவன் புதிதாக தோற்றுவித்தால் அதை ஏற்று அமல் செய்கின்றவர்களுக்கு கிடைக்கும் பாவங்களைப் போன்ற பாவம் அதை தோற்றுவித்தவனுக்கும் கிடைக்கும் எனும் ஹதீஸ் திர்மிதி, இப்னுமாஜாவில் வரையப்பட்டுள்ளது.

ஆகவே, அல்லாஹ்வும் ரசூலும் பொருந்திக்கொள்கின்ற பித்அத்துக்களும் இருக்கின்றன. அவைகளுக்கு "பித்அத்தே ஹஸனா" எனச் சொல்லப்படும் என்று ஹதீதுக்கலையில் தேர்ச்சிபெற்ற இமாம்கள் கூறுகிறார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள் நல்ல நடைமுறையை செயல்படுத்தும் ஒருவனுக்கு அதற்குரிய கூலியும், அதைப்பின்பற்றி செயல்படுவோரின் கூலியும் கிடைக்கும். தீயநடைமுறையை செயல்படுத்தும் ஒருவனுக்கு அதற்குரிய குற்றமும், அதைப் பின்பற்றிக் செயல்படுவோரின் குற்றமும் கிடைக்கும் என்று. (முஸ்லிம்)

இந்த ஹதீதாலும் பித்அத்துக்களில் பித்அத்தே ஹஸனா (நல்லவை) பித்அத்தே சய்யிஆ (வேண்டாதவை) என இரு வகையுண்டு எனத் தெரிகிறது என்றும், பித்அத்தே ஹஸனாவிற்கு பித்அத் எனச் சொல்வது அரபிப்பதத்தை வைத்தே தவிர்த்து மார்க்கத்தின் அடிப்படையில் அல்ல என்றும் இமாம்கள் கூறுகிறார்கள்.

ஹலரத் உமர் (ரலி) அவர்கள் தொழுகையைப் பற்றிச் சொல்லுகையில், இது பித்அத்தே ஹஸனா(நல்ல)வாகும் எனச் சொன்னதில் பித்அத் எனும் வார்த்தைக்கு பல அர்த்தத்தையே நாடியுள்ளார்கள் என்று, இப்னுஹஜர் (ரஹ்) அவர்கள் (தமது பத்தாவா ஹதீதிய்யாவில் 200ம் பக்கத்தில் எழுதுகிறார்கள். மேலும் பத்ஹுல்பாரி, பதிமூன்றாம் வால்யூம் 294ம் பக்கத்தில் மார்க்க அடிப்படையின் மீது அறிவிக்கப்படுகின்ற விஷயங்கள் பித்அத்துக்கள் அல்ல என்றும் கூறுகிறார்கள்.

எனவே அண்ணல் நபி (ஸல்) அவர்களது காலத்தில் உள்ள விஷயங்களானாலும், அவர்களது காலத்திற்கு பின்னுள்ள விஷயங்களானாலும் மார்க்க அடிப்படையில் ஆதாரங்கள் இல்லாதவைகளை "பித்அத்" என்றும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களது காலத்தில் இல்லாத விஷயங்கள் அவை மார்க்க அடிப்படையில் ஆதாரங்கள் உள்ளவைகளாக இருப்பின் 'பித்அத் அல்ல' என்பதையும் தெளிவாக தெரிந்து கொள்ளவேண்டும்.

## பித்அத்தே ஹஸனாவைப் பேணல் :

அல்லாமா அபூஷாமா (ரஹ்) அவர்கள் தமது அல்பாயிஸ் எனும் நூலில் பித்அத்தே ஹஸனாவைப் பேணி செயல்படுவது சுன்னத் என்றும், நல்லெண்ணத்துடன் செயல்படுவதால் அவைகளுக்கு அல்லாஹ்விடம் நற்கூலி கிடைக்கும் என்றும் அறிஞர் பெருமக்கள் ஏகமனதாகக் கூறுகிறார்கள் என்று கூறுகிறார்.



மௌலூது, ராத்தீபு, கப்ரு ஸியாரத்து போன்று இன்று முஸ்லிம்களால் பேணப்பட்டுவரும் அநேக ஹதீதுகளால் உறுதி செய்யப்பட்டவைகளும், முஜ்தஹித்களான உலமாப் பெருமக்களால் மார்க்க ஆதாரங்களை அடிப்படையாக வைத்து ஏற்படுத்தப்பட்டவைகளுமாகும்.

## மௌலூது :

மௌலூது என்றும், மௌலிது என்றும் இதை சொல்லப்படுவதுண்டு. மௌலூது என்றால் சிறுகுழந்தையென்றும், மௌலிது என்றால் குழந்தை பிறந்தகாலம், இடம் என்றும் பதப்பொருள் கொள்ளப்படும்.

ஒருவரின் பிறப்பு, அவர் சம்பந்தப்பட்ட விஷயங்கள், பிறந்த காலச் சூழ்நிலைகள், பிறந்த இடம் சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பற்றியெல்லாம் கூறப்படுவதற்கு இன்று மௌலூது எனச் சொல்லப்படுகிறது.

## மௌலூது சுன்னத்தா? பித்அத்தா?

ஒருநாள் ஹலரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் தமதில்லத்தில் சிலரிடம் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பிறப்பைப்பற்றிக் கூறிக் கொண்டிருந்தார்கள். அதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் அல்லாஹ்வைப் புகழ்ந்தும், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீதும் சலவாத்தும் கூறியும் மகிழ்ச்சிப் பெருக்கால் திளைத்திருந்தார்கள்.

அப்போது அங்கு வருகை தந்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இவர்களை நோக்கி "எனது ஷபாஅத் உங்களுக்கு ஹலாலாகிவிட்டது" எனச் சொன்னார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஹலரத் அபுத்தர்தா.·. (ரலி) அவர்களுடன் ஹலரத் ஆமிகுல் அன்சாரி (ரலி) அவர்களுடைய இல்லத்திற்குச் சென்றபோது, ஹலரத் ஆமிகுல் அன்சாரி (ரலி) அவர்கள் தமது குழந்தைகளுக்கும், உறவினர்களுக்கும், அண்ணல் நபி (ஸல்) அவர்களுடைய பிறப்பைப் பற்றியும் அவர்களுடைய வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் கூறிக்கொண்டிருந்தார்கள்.

இதைக் கவனித்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள் "அல்லாஹ் ரஹ்மத்தின் வாசல்களை உமக்குத் திறந்துள்ளான். வானவர்கள் உமக்காக பிழைபொறுக்கத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த (நன்மையான) செயலை பேணுவோரும் நீர் ஜெயம் பெற்றதைப் போன்று ஜெயம் பெறுவர்" எனக் கூறினார்கள்.



இவ்விரு நிகழ்ச்சிகளாலும் மௌலூது ஓதுவது சுன்னத்துதான் என தெளிவாக விளங்குகிறது.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து வந்தபின்பு மதீனாவில் வாழும் யூதர்கள் முஹர்ரம் 10ம் நாள் நோன்பு நோற்கக் கண்டார்கள்.

அவர்களிடம் அதற்கான காரணம் வினவியபோது, "இந்த நாளில்தான் கொடியோன் பிர்அவ்னை நைல்நதியில் மூழ்கடித்து நபி மூஸா (அலை) அவர்களைக் காப்பாற்றி வெற்றி கொள்ள வைத்தான் அல்லாஹ். அதற்கு நன்றி செலுத்தியே இந்நாளில் நோன்பு நோற்கிறோம்" எனச் சொன்னார்கள். யூதர்கள் இறைவன் புரியும் நி.·.மத்துக்களுக்கும், உபகாரங்களுக்கும் நன்றிபுரிவது கடமை என்பதை இந்த ஹதீதின் மூலம் தெரியலாம்.

இமாம் பைஹகீ (ரஹ்) அவர்கள் 'ஷு.·.புல் ஈமான்' எனும் நூலில் ஹலரத் நு.·. மான் இப்னு பசீர் எனும் ஸஹாபி கூறியதாக இவ்வாறு சொல்கிறார்கள். "இறைவன் செய்த நி.·.மத்தை நாவால் மொழிவது நன்றியாகும். மொழியாதிருப்பது நன்றி மறத்தலாகும்" என்று.

அஸ்ஸில் குல் முஅள்ளம் பக்கம் : 77-90

"நாம் பெற்ற உபகாரங்களை நாவினால் மொழிவது அதை அளித்தவனுக்கு நன்றி செலுத்தலாகும்" என்று ஹலரத் உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

அஸ்ஸில் குல் முஅள்ளம் பக் : 77-80

இந்நிலையில் 'அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அகிலமனைத்திற்கும் அருட்பிழம்பாய் அனுப்பியுள்ளோம் என திருக்குர்ஆன் ஷரீபும், "நபியே! தாங்கள் இல்லாவிட்டால் வானம், பூமி, சொர்க்கம், நரகம் முதலிய எப்பொருளையும் நான் படைத்திருக்கமாட்டேன் என ஹதீதே குதிஸியும் இவை போன்ற இன்னும் அநேக குர்ஆன் வசனங்களும், கோமான் நபி (ஸல்) அவர்களின் பொன் மொழிகளும், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அகிலத்தாருக்குக் கிடைத்த பேரருள் எனத் தெரிவிக்கின்றனர்.

தமது ஜீவியகாலத்தைப் போன்றே தாம் வபாத்தானதற்குப் பின்பும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அகிலத்தாருக்கு அருளாகவே இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே இப்பேரருளைத்தந்த இறைவனுக்கு நன்றி செலுத்துவது நமது கடமையாகும்.



மேற்காணும் அஸ்ஸில்குல் முஅள்ளம் எனும் நூலில் காணும் இரு ஹதீஸ்களின் பிரகாரம் பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறுகளை கூறுவதும், ஓதுவதும் கடமையாகும்.

## மௌலூதை பற்றி மார்க்க மேதைகள் :

ஹலரத் இப்னு ஹஜருல் ஹைத்தமி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்;

மார்க்கத்திற்குப் புறம்பான செயல்கள் இல்லாதவாறுள்ள மௌலூதும், திக்ருகளும் சுன்னத்தாகும்.

பத்தாவா ஹதீதிய்யா, பக்கம் : 9-10

இமாம் சுயூத்தி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். மௌலூது ஓதுவதும், அதற்கான தான, தர்மங்கள் செய்வதும், அல்லாஹுவிடம் நற்கூலியைப் பெற்றுத்தரும் பித்அத்தே ஹஸனாவைச் சார்ந்ததாகும்.

இஆனா, பக்கம் : 154-வா:3

பித்அத்தே ஹஸனாவிற்கு பித்அத்து எனச் சேர்த்துச் சொல்வது அரபி மொழி அடிப்படையிலேயே தவிர்த்து, மார்க்க அடிப்படையில் அல்ல என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

"நான் பெருமானார் (ஸல்) அவர்கள் பேரில் ஓதப்படும் மௌலூது விஷயத்தில் இவ்வளவு அதிகம் பேசக்காரணம், முஸ்லிம்கள் அனைவரும் இது விஷயத்தில் பூரண ஆசையும், பெரும் முக்கியத்துவமும் கொள்ளவேண்டுமென்பதே" என ஹலரத் சையித் பக்ரி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

இஆனா, பக்கம் : 356 வா : 3

## ஸஹாபாக்கள் மௌலூது ஓதினார்களா?

இதற்குரிய பதிலை மௌலூது ஓதுவது சுன்னத்தா அல்லது பித்அத்தா எனும் தலைப்பில் இந்நூலில் எழுதப்பட்டுள்ள இரு ஹதீதுகளின் நிகழ்ச்சிகள் சஹாபாக்களும் மௌலூது ஓதினார்கள் என்பதை தெளிவுபடுத்துகிறது.

## மௌலூது ஓதும்போது எழலாமா?

செம்மல் நபி (ஸல்) அவர்களை சங்கைப்படுத்தும் பொருட்டு மௌலூது ஓதும் போது எழுந்திருப்பது நடைமுறையில் இருந்துள்ளது. அது மிக நல்லதுமாகும்.

ஏனெனில் அறிஞர் பெருமக்கள் குழுமிய ஹலரத் சுபுக்கி (ரஹ்) அவர்களுடைய சமூகத்தில் சர்சரி எனும் கவிஞன் பாடிய பெருமானாரின் புகழ்மாலையை ஒருவர் பாடியபோது ஹலரத் சுபுக்கி (ரஹ்) அவர்களும் அங்கு குழுமியிருந்த அறிஞர்களும் எழுந்து நின்றார்கள் என்று சைய்யித் பக்ரி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

இஆனா, வால் : 3 பக் : 355

## மௌலூதுக்காக செலவழித்தல் :

உஹுதுமலை அளவு தங்கம் என்னிடம் இருப்பினும் அதை உத்தம நபி (ஸல்) அவர்கள் மீது மௌலூது ஓதுவதற்காக செலவு செய்வேன் என்று ஹலரத் ஹஸன்பஸரி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

வண்ணவிளக்குகளால் வீட்டை அலங்கரித்து, புத்தாடைகள் அணிந்து, நறுமணம்பூசி நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது மௌலூது ஓதி, அன்னதானமிட்டு அவர்களை கண்ணியப்படுத்துகின்றவனை நபிமார்கள் கூட்டத்தில் அல்லாஹ் எழுப்புவான் என்று ஹலிரத் ம.்.ருபுல்கர்கி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

வள்ளல் நபி (ஸல்) அவர்களின் மௌலூதுக்காக வருகை தந்து அவர்களை சங்கை செய்பவன் ஈமானால் சங்கையுறுவான் என்று ஹலரத் ஜுனைதுல் பக்தாதி (ரஹ்) அவர்கள் சொல்கிறார்கள்.

இஆனா : பக் 355 - வா : 3

## மௌலூதின் பலன்கள் :

மௌலூது ஓதப்படுகின்ற வீடு, மஸ்ஜித் மற்றும் மஹல்லாவில் மலக்குகள் சூழ்ந்து கொள்கிறார்கள். அல்லாஹ் அவர்களுக்கு கருணை பொழிகிறான். வானவர்களில் சங்கைக்குரியவாகள் மௌலூது ஓதக் காரணமாக இருந்தவர்களுக்காக பிரார்த்தனை புரிகிறார்கள் என்றும்,

மௌலூது ஓதிவரும் ஒரு முஸ்லிமுடைய வீட்டில் பஞ்சம் பொறாமை, காலரா, கோபம், நெருப்புப் பற்றுதல், திருடர்களின் தொல்லைகள் போன்ற கஷ்ட நஷ்டங்களை அல்லாஹ் போக்கி விடுகிறான் என்றும்,

மரணத்திற்குப் பின்பு கப்ரில், முன்கர், நகீர் ஆகிய இரு மலக்குகளின் கேள்விக்குரிய பதில்களை மிக இலேசாக்கி விடுகிறான் அல்லாஹ் என்றும்



ஹலரத் சுல்தானுல் ஆரிபீன் ஜலாலுத்தீன் சுயூத்தி (ரஹ்) அவர்கள் "அல்வாயில்" எனும் தமது நூலில் எழுதுகிறார்கள்.

இஆனா, பக்கம் : 356 - வா : 3

## ஓதியதற்கு ஊதியமா?

தம்மை புகழ்ந்து படியதற்காக ஹலரத் க.்.பு (ரலி) அவர்களுக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மகிழ்ச்சிப் பெருக்கால் தமது மேனியை அலங்கரித்த போர்வையை அன்பளிப்பாக ஈந்து கௌரவித்தார்கள்.

ஹலரத் க.்.பு (ரலி) அவர்கள் தமக்குக் கிடைத்த பெரும் பேறாகக் கருதி அப்போர்வையை பாதுகாப்பாக வைத்திருந்தார்கள். அவர்களது மரணத்திற்குப் பின்பு ஹலரத் முஆவியா (ரலி) அவர்கள் இருபதினாயிரம் வெள்ளி நாணயங்கள் கொடுத்து அவர்களுடைய வாரிசுகளிடமிருந்து அப்போர்வையை வாங்கினார்கள்.

மௌலூதை ஓதியதற்கு ஊதியம் பெறலாமா? ஹதியாக்கள் வாங்கலாமா?... அவ்வாறு கொடுப்பது கூடுமா? என்றெல்லாம் கூப்பாடு போடும் அப்பாவிகள் ஹலரத் க.்.பு (ரலி) அவர்களது சம்பவத்தை கவனிப்பார்களா?

அண்ணல் நபி (ஸல்) அவர்களை புகழ்ந்து பாடியதற்காக அவர்களது பேரன்பைப் பெற்றார்கள் ஹலரத் க.்.பு (ரலி) அவர்கள். 'மௌலூது' என்பதும் அவர்களது புகழைப் பாடுவதேயாகும். அவ்வாறு மௌலூது ஓதுவதால் அண்ணல் நபி (ஸல்) அவர்களுடைய அன்பு கிடைக்கிறது என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது மௌலூது ஓதுவதைப் போன்றே மற்ற நபிமார்கள், வலிமார்கள், ஷுஹதாக்கள், ஸாலிஹீன்கள் போன்றோர்களின் மீதும் மௌலூதுகள் ஓதுவதும் புகழ்மாலைகள் பாடுவதும், கடமையும் அவசியமுமாகும். ஏனெனில் நபிமார்களைப் பற்றி பேசுவது இபாதத் என்றும் சாலிஹீன்களைப் புகழ்வது பாவத்திற்குப் பரிகாரம் என்றும் ஹதீதுகளில் வருகிறது.

ஆகவே, அல்லாஹ்வின் நல்லடியார்கள் அனைவரின் மீதும் புகழ்மாலைகள் பாடவேண்டும். மௌலூதுகள் ஓத வேண்டும்.

கருணையுள்ள ரஹ்மான் நபிமார்கள், வலிமார்கள், ஸாலிஹீன்கள், ஷுஹதாக்கள் பொருட்டால் நமது ஈருலக வாழ்விலும் எல்லா வகை வெற்றிகளையும் இனிதே தந்தருள்வானாக! ஆமீன்.



## ராத்திபு :

மௌலூது ஓதுவதால் எந்தப் பலனும் இல்லையென்று இஸ்லாமியப் பொதுமக்களிடம் தப்பான பிரச்சாரம் செய்து வரும் ஒரு சில அரைகுடங்கள் "ராத்திபு" ஓதுவதாலும் பலனில்லை. அதற்கு எவ்வித அடிப்படையுமில்லை என்றெல்லாம் கூறி வஹ்ஹாபிய வழிகேட்டின் பக்கம் பொதுமக்களை திசை திருப்பப்பார்க்கிறார்கள். எனவே ராத்திபு சம்பந்தப்பட்ட விஷயங்களையும் தெரிந்து கொள்வது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும்.

ராத்திபு எனும் அரபிப் பதத்திற்கு நிலையானது நேமமானது என்ற பொருள் கொள்ளப்படும். நடைமுறையில் வெள்ளி, திங்கள் இரவுகளிலோ அல்லது குறிப்பிட்ட ஏதாவதொரு இரவிலோ அல்லது மாதந்தோறுமோ, அனுதினமுமோ குறிப்பிட்ட ஒரு நேரத்தில் தொடர்ந்து ஓதுகின்ற திக்ருகளுக்கு ராத்திபு எனச் சொல்கிறோம்.

## திக்ரு என்றால்?

திக்ரு என்றால் 'சொல்லப்படுபவை' என பொருள் கொள்ளப்படும். புகழ், அல்லது பிரார்த்தனைக்காக சொல்லப்படும் பதத்திற்கும் சொல்லியதால் நன்மை கிட்டும் பதத்திற்கும் 'திக்ர்' என மார்க்க அடிப்படையில் சொல்லப்படுகின்றது.

தலீலுல் பாலிஹீன், வால் : 4 - பக் :208
துஹ்பா எனும் நூலிலும் இவ்வாறே எழுதப்பட்டுள்ளது.

அல்லாமா குர்துபி (ரஹ்) அவர்கள் தமது முப்ஹிம் எனும் நூலில் 12ம் பக்கத்தில் அல்லாஹ்வின் கலாம், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சுன்னத் சாலிஹீன்களின் செய்தி, இமாம்களின் கூற்றுக்கள் போன்றவைகளைப் பற்றி பேசப்படுகின்ற இடங்கள் திக்ரின் மஜ்லிஸாகும் எனக் கூறுகிறார்கள்.

தஸவ்வு.்.புல் அஸ்மா : பக் : 12

## திக்ரும், திருக்குர்ஆனும் :

திக்ரைப் பற்றி திருக்குர்ஆனில் அல்லாஹ் பல்வேறு இடங்களில் பிரஸ்தாபிக்கின்றான்.

01. என்னை நீங்கள் (திக்ர்) நினைவு கூறுங்கள். உங்களை நானும் நினைவு கூர்ந்து அருள்புரிவேன். (2 : 152)



02. நபியே! உம் மனதிற்குள் மிக பணிவோடும் பயத்தோடும் உரத்த குரலின்றியும், காலையும், மாலையும் உமதிறைவனின் திருநாமத்தை துதிசெய்து வருவீராக! அவனை மறந்திருப்போரில் நீரும் (வினாடிப் பொழுதேனும்) ஆகிவிடாதீர்கள். (7 : 205)

03. அல்லாஹ்வின் திக்ரு (செய்வது) நிச்சயம் அனைத்திலும் மிகப் பெரிதாகும். (29 : 45)

04. நிச்சயமாக முஸ்லிமான ஆண்களும், பெண்களும், விசுவாசிகளான ஆண்களும், பெண்களும் அல்லாஹ்விற்கு வழிப்படும் ஆண்களும், பெண்களும், உண்மையே பேசும் ஆண்களும், பெண்களும், அல்லாஹ்வை அஞ்சி வாழும் ஆண்களும், பெண்களும், தானமளிக்கும் ஆண்களும், பெண்களும், நோன்பு நோற்கும் ஆண்களும், பெண்களும், தங்களது கற்பைப் பாதுகாத்துக் கொள்ளும் ஆண்களும், பெண்களும், அல்லாஹ்வை அதிகம் திக்ரு செய்யும் ஆண்களும், பெண்களும் ஆகிய இவர்களுக்கு மன்னிப்பையும் மகத்தான கூலியையும் அல்லாஹ் சித்தப்படுத்தி வைத்திருக்கிறான். (33 : 35)

05. விசுவாசிகளே! அதிகமதிகம் அல்லாஹ்வை திக்ரு செய்யுங்கள். (33 : 41)

06. நீங்கள் சித்தியடையும் பொருட்டு அல்லாஹ்வை திக்ரு செய்யுங்கள். (64 : 10)

என்றெல்லாம் திக்ரைப் பற்றியும், திக்ரின் மாண்புகளை பற்றியும் அல்லாஹ் கூறுகிறான்.

## திக்ரும், திருநபியும் :

01. ஹலரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். அல்லாஹ் சொன்னதாக அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள். அதாவது எனதடியான் என்னைப்பற்றி எவ்வாறு எண்ணுகிறானோ அவ்வாறே அவனைப்பற்றி நானும் எண்ணுகிறேன். என்னை அவன் திக்ரு செய்தால் நான் அவனோடு இருக்கின்றேன். அவனுள்ளத்தில் என்னை அவன் திக்ரு செய்தால் நானும் எனதுள்ளத்தில் அவனை நினைக்கிறேன். ஒரு கூட்டத்தில் வைத்து என்னை அவன் திக்ரு செய்தால், அதைவிடச் சிறந்த கூட்டத்தில் வைத்து அவனை நான் நினைவு கூருவேன்.

(மிஷ்காத், பக்: 196, ரியாலுஸ்ஸாலிஹீன் பக்: 349, புகாரி - முஸ்லிம்)

02. ஹலரத் அபுதர்த்தா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். ஒரு சமயம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சஹாபாப் பெருமக்களிடம் உங்களிடம் உங்களின் அமல்களில் மிகச் சிறந்ததும், உங்கள் எஜமானனாம் அல்லாஹ்விடம் மிகத் தூய்மையானதும் உங்கள் விரோதிகளை நீங்கள் வெட்டுவதையும் அவர்கள் உங்களை வெட்டுவதையும் (ஆதாவது ஜிஹாதையும்) காணச் சிறந்ததொரு அமலை உங்களுக்கு அறிவித்துத்தரட்டுமா எனக் கேட்டார்கள். உடனே சஹாபாக்கள் யாரசூலல்லாஹ்! அறிவித்துத் தாருங்கள் என வேண்டினார்கள். அப்போது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள் அதுவே அல்லாஹ்வின் திக்ராகும் என்று.

(மிஷ்காத், பக்:198, ரியாலுஸ்ஸாலிஹீன்:349,350 அறிவிப்பவர் திர்மிதி)

03. அமர்ந்து திக்ர் செய்யும் கூட்டத்தை மலக்குகள் சூழ்ந்து கொள்கிறார்கள். அல்லாஹ்வின் அளப்பெரும் கருணைக்குரியவர்களாகிறார்கள். அமைதி கிடைக்கிறது. தனது நபிமார்களிடத்திலும், மலக்குகளிடத்திலும் அல்லாஹ் அவர்களைப் பற்றி பெருமையாகப் பேசுகிறான் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அவர்களும் அபூஷஹீத் (ரலி) அவர்களும் கூறுகிறார்கள்.

(மிஷ்காத், பக்:198, ரியாலுஸ்ஸாலிஹீன், பக்:352, அறிவிப்பவர்:முஸ்லிம்)

இந்த ஹதீதுகள் உட்கார்ந்து திக்ர் செய்வதற்கு ஆதாரமானவைகளாகும். இதற்கு ஆதாரமாக இன்னும் பல ஹதீதுகள் இருப்பினும் அறிவுடையோருக்கு ஒன்றிரண்டு போதுமன்றோ!

## ஆடியும், அசைந்தும் திக்ர் செய்யலாமா?

அல்லாஹ்வால் இவ்வுலகுக்கு அனுப்பப்பட்ட ஹலரத் ஆதம் (அலை) அவர்கள் முன்னூறு வருடங்களாக அழுதார்கள். அப்போது ஹலரத் ஆதம் (அலை) அவர்களை அழைத்து ஏன் எழுகிறிர், காரணம்? என அல்லாஹ் கேட்டான்.

அதற்கு ஆதம் (அலை) அவர்கள் இறைவா! சொர்க்கத்தை ஆசித்தோ, நரகத்தை அஞ்சியோ நான் அழவில்லை.

மம் மித்லுனா வஅன்த ரப்புனா
மம் மித்லுனா வஅன்த ஹபீபுனா

இறைவா! நீ எங்களது ரப்பாக இருக்க எங்களுக்கு ஒப்பானவர் யார்?
இறைவா! நீ எங்களது நேசனாக இருக்க எங்களுக்கு ஒப்பானவர் யார்?



என்று ஒருவரை ஒருவர் கை கோர்த்தவர்களாக ஆடிப்படி அர்ஷை வலம் வருகின்ற முகத்திலும், மேனியிலும் ரோமங்களே இல்லாத அந்த அழகிய மலக்குகளை விட்டுப் பிரிந்ததற்காகவே அழுகிறேன் என்று சொன்னார்கள்.

அப்போது, ஆதமே! உமது தலையை உயர்த்திப்பாரும் என்று அல்லாஹ் சொல்ல, ஆதம் (அலை) அவர்கள் அவ்வாறே பார்த்தபோது, அந்த மலக்குகளைக் கண்டு மகிழ்ந்தார்கள் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அஸ்ஸைஹு"ல் ஹலீலிய்யில் எழுதப்பட்டுள்ளது.

(தஸவ்வு.'.புல் அஸ்மா, பக் : 29)

ஆதலால் தலையையும், உடலையும் அசைத்தவாறு தாராளமாக திக்ர் செய்யலாம். ஏனெனில் சஹாபாப் பெருமக்கள் கடும் காற்று வீசுகின்றபோது மரங்கள் அசைவதைப் போன்று தமதுடலை அசைத்து திக்ர் செய்வார்கள் என்று புடவைகளையும் நனைத்துவிடுமளவு அழுவார்கள் என்றும் அலி (ரலி) அவர்கள் கூறியதாக ஹாபிழ் அபூநுஜம் அவர்கள் கூறுகிறார்கள்.

(தஸவ்வு.'.புல் அஸ்மா, பக் : 33)

## ராத்திபிலுள்ள திக்ருகள் :

ராத்தீபுகளில் வரும் ஒரு சில திக்ருகளைக் குறித்து அவைகள் பொருளற்றவை என சிலர் வாதிக்கின்றார்கள். இது அவர்களின் அறியாமையேயாகும். ஏனெனில் பிரச்சினைக்குரிய திக்ருகள் என கூறப்படுகின்ற ஆஹ் - ஆஹ் - ஹு" - ஹு" - அஹ் - அஹ் போன்ற வார்த்தைகள் அர்த்தம் பொதிந்த திக்ருகளேயாகும்.

அஹ் என்பது இஸ்முல் அ.'.லம் என்று அல்லாமா ஹபனி அவர்கள் ஜாமிஉஸ்ஸகீர் என்ற நூலின் தனது ஹாஸியாவில் எழுதுகிறார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹு"ரைரா (ரலி) அவர்கள் கூறுகிறாகள். அதாவது;

நோயாளி முனங்கிக் கொண்டிருக்கின்றான் என்பதற்காக அவனை கடிந்து கொள்ளாதீர்கள். அவன் முனங்கிக்கொண்டிருக்கட்டும். ஏனெனில் அஹ் - அஹ் அவனது முனகல் இறை நாமங்களில் ஒன்றாகும். அதனால் அவன் சுகம் பெறுகிறான்.

அல்லாமா அஜீஸி ஹாபிலுஸ்ஸு"யூத்தி அவர்கள் முஸ்லிம் ரிவாயத்துச் செய்யும் இந்த ஹதீதை ஜாமி உஸ்ஸகீர் எனும் நூலின் தனது விரிவுரையில் கூறுவதாக,



அபுஸ்ஸாதாத் அஹ்மத் கோயா ஷாலியாத் (நவ்) அவர்கள் தமது பதாவா அஜ்ஹரிய்யாவில் எழுதுகிறார்கள்.

இது சம்பந்தமாக அதிக விபரத்தை தெரியவிரும்புகின்றவர்கள் பதாவா அஜ்ஹரிய்யாவை பார்வையிட வேண்டுகிறேன்.

காயல் பட்டணம் காமிலான வலி ஸதகதுள்ளாஹ் அப்பா (ரஹ்) அவர்களின் தம்பி ஸாம் ஷிஹாபுத்தீன் வலியுள்ளாஹ் (ரஹ்) அவர்கள் வஹ்ஹாபிகளைப் பற்றி பாடிய சில பாடல்கள்.

**நல்ல அறிவான அகமியத்தை**
**நாடியறியாத வஹ்ஹாபிகள்**
**பொல்லா பிது அத்தை ஷிருக்கா மென்று**
**புலம்பி மனிதரை கலக்கமாக்கி**
**கல்லு புத்தோடு நபியொலியை**
**கலந்து பேசியே சமதியாக்கி**
**வெல்லு மொளிவான ஈமான் மாறி**
**வேறே சாதியாய்க் கெட்டார்களே.**
(சமதி - சமம்)

**வொலிமார் நபிமார்கள் தங்களுக்கே**
**உவந்து நேர்ந்தொரு கோழியாட்டை**
**அலியாம் நாயகன் இஸ்மு கொண்டே**
**அழகா யறுத்தது ஹலாலதாகி**
**பொலி வாயிரப்பதை வஹ்ஹாபிகள்**
**பொல்லா ஹராமென்று ஷிருக்குமாக்கி**
**வலியோன் பொருந்தக் கேடதனைப் பெற்று**
**வாடிக் கலக்கமாய் கெட்டார்களே.**
(அலியாம் - மேலாம் பரமான, நாயகன் இஸ்மு, இறைவனுடைய திருப்பெயரால் பிஸ்மில்லாஹ், பொலிவு - சிறப்பு, வலியோன் - வல்ல இறைவன்)

**முத்திலு தித்த வோர் நபியொலியை**
**மூமினானவன் தன் ஹாஜத்தில்**
**சத்தமுடன் கூவி கேட்கிறது**
**சாதி இசுலாவில் ஆமானதாம்**
**சுத்தி யுளறிடும் வஹ்ஹாபிகள்**
**கனத்த ஷிருக்காகுமென்று சொல்லி**



**புத்தியிழந்து நல்லறிவு தன்னைப்**
**புகுந்து விளங்காமல் கெட்டார்களே.**
**மவுத்தான மூமின் பேர்களுக்கு**
**பாத்திஹா கத்தம் ஓதுவது**
**ஸவுத்து அழகான நமது நபி**
**சாற்றினா ரது வாகுமென்றும்**
**கவுத்துவமான பாவம் நீக்கி**
**காட்சி பெறவே தான் தவாபு சேரும்**
**மவுத்தை படைத்தோனின் நபி சொன்னதை**
**மாற்றி வஹ்ஹாபிகள் கெட்டார்களே.**
(ஸவுத்து - குரல், கவுத்துவம் - வஞ்சகம் தவாபு - புண்ணியம்)


**வைத்தவுடன் கண்ணில் நோயகன்று**
**வாகாம் ஒளிவுண்டாம் வஹ்ஹாபிகள்**
**ஷைத்தான் குணத்தினால் விரல் வைக்காமல்**
**சிதறி வெறுத்துப் பின் வைப்போர்களை**
**கைத்துப் படுத்தியே விலக்கல் செய்து**
**கத்தன்னபி தம்மை வெறுத்தார்களே**
**பைத்தாறொரு மூன்றில் பயணம் போன**
**பார நபி தம்மை வெறுத்தோர் கெட்டார்**
(சிதறி - உருப்படாமல் போய், கைத்துப்படுத்தி - வெறுப்புண்டாக்கி, கத்தன் - இறைவன் பைத்தாறொரு மூன்றில் - 63வது வயதில், பார - மேலாம் பரமான)

**கூட்டம் கூடியே நபி மௌலிதை**
**குணமாய் ஓதின பேர்களெல்லாம்**
**நாட்டமுடன் நபி யுவப்புண்டாக்கி**
**நாளை ஷபா அத்தைப் பெறுவோர்களே**
**தேட்டமுடன் நல்ல பெரியோ ரெல்லாம்**
**தேடித் தேடியே ஓதி வர**
**மாட்டு மனிதராம் வஹ்ஹாபிகள்**
**மாறி விலக்கியே கெட்டார்களே.**

**இந்த வஹ்ஹாபிகள் வார்த்தைகளை**
**எடுத்து நடவாமல் அவுலியாக்கள்**

வந்த பாதையில் நாம் நடந்து
வரிசைப்படுத்தி செல்ல அமலும் செய்து
கந்த முள நபி மன்றாட்டத்தைக்
கண்டு தரிசனைப் பேரின்பத்தை
அந்த முள நாயன் தந்திடவே
அன்பாய் முஸ்லிம்கள் துஆ செய்வீரோ
(வரிசைப்பதி - சொர்க்கம், கந்தம் - நறுமணம், அந்தம் - அழகு)

ஸல்லல்லாஹு அலா முஹம்மது
ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்
ஸல்லல்லாஹு அலா முஹம்மது
ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்
ஸல்லல்லாஹு அலா முஹம்மது
யாரப்பி ஸல்லி அலைஹி வஸல்லம்.





www.EravurSYF.com
Twitter: SYFSMS
swjf786@gmail.com